JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 3, 4.] { மார்ச்சுமீ / ஏப்பிரல்மீ } 1882. புஸ்த. XIII.

CONTENTS.

Christopher Columbus 51
A Pinch of Salt 56
A Blacksmith and a Tailor...... 64
The Welcome Spring 72
The Earth's Treeless Regions... 75
On Good Company 81
The Child's Corner 84
News 92

அட்டவணை.

க்ரிஸ்தபர் கொலம்பஸ் 51
ஒரு கட்டி உப்பு 56
ஒரு தச்சனும் தையற்காரனும் 64
வஸந்தருதுவின் நல்வரவு.......... 72
பூமியிலுள்ள மரமில்லா வெளிகள்... 75
நல்லோரிணக்கம் 81
சிறுவர்க்கான கதை 84
சமாசாரம் 92

MADRAS:
Published by the
MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,
AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

TO OUR READERS.

In commencing a new volume of *Janavinodini*, we bid all a hearty welcome to its pages, and wish to remind them that, while the seasons pass quickly by, here we are still at our post, unchanged at least in one thing—our desire to please and interest our readers as far as we can; and the knowledge that our readers think kindly of us and of our work performed under difficulties will give us fresh energy for the coming year. Every month we shall put in something in the pages of *Janavinodini* adapted for nearly all ages, as well as interesting stories fitted for home use.

This Magazine requires now as much support as it is possible to secure, and this may be given in three ways; (1) By annual subscriptions *paid in advance*, and special donations for providing suitable pictures to charm the young more than ever; (2) By making the Magazine more widely known with a view to give it a larger circulation both in Town and Country; and (3) By literary contributions suited to the pages of the Magazine.

We take this opportunity to thank the able writers who during the past year kindly contributed some useful papers to *Janavinodini*, and hope that we shall continue to receive more of such co-operation in the year which has begun.

க்ரிஸ்தபர் கொலம்பஸ்.

ஜநவிநோதிநி.

இல. 3, 4.] {மார்ச்சுமீ ஏப்பிரல்மீ} 1882. [புஸ்த. XIII.

க்ரிஸ்தபர் கொலம்பஸ்.

அடுத்த படத்தில் விளங்குகின்ற வடிவழகுள்ள கொலம்பஸ் என்பவன் ஜினேவா என்னும் பட்டணத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவன். அவன் பிதா ஆட்டுமயிரைச் சிக்கெடுத்து ஜீவனஞ்செய்பவனாக இருந்தும், தன் சக்திக்குக் கூடியமட்டும் அச்சிறுவனைக் கல்விபயிலச் செய்வித்தான். அச்சிறுவன் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டு, கணிதத்திலும், படம் எழுதும் வித்தையிலும் பயின்று, லத்தீன் பாஷையையும் சிறிது அப்பியசித்தான். அவனுக்கு விரிந்த கடலின்மீது போவதில் விருப்பம் உண்டாயிற்று. சுதேசஸ்தர்கள் கப்பல்யாத்திரை செய்வதில் அதிக பழக்கமுள்ளவர்களாயிருந்தமையாலும், அக்காலத்தில் அநேகர் புதிதாய்த் தீவு முதலியவைகளைக் கண்டுபிடிப்பதில் முயற்சியுள்ளவர்களாய், மிகுந்த துணிவுகொண்டு கப்பலேறிப் போக்குவரவு செய்துவந்தமையாலும், அச்சிறுவனும் சாதாரணமாய்த் திரைகடலின்மீது கப்பல்பிரயாணம் செய்வதில் பிரியங்கொண்டு, பதினான்கு வயதிலேயே அத்தொழில் செய்யத் தொடங்கினான். அக்காலத்தில் ஜனங்கள் கப்பலோட்டும் வித்தையாகிய மாலுமி சாஸ்திரத்தில் மிகுதியும் தேர்ச்சியடைந்திருக்கவில்லை. கப்பல்யாத்திரை செய்வதென்றால், மத்திய தரைக்கடற்கரையிலுள்ள ஓர் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, நீர் எலிகளைப்போல் எப்பொழுதும் கடலின்மீதே வஸித்துக்கொண்டு சிறிதும் இரக்கமில்லாக் கொலைபாதகர்களாயிருக்கும் பார்பரிதேசத்துக் கப்பல் திருடர்களுடைய பயத்தோடு, வேறு துறைமுகங்களுக்குக் கரையோரமாகச் செல்வதே. இவ்விதமாகக் கொலம்பசு சிறுவயதில் பலவிசை யாத்திரைசெய்து, அக்கப்பல் திருடர்களிடத்தில் அகப்பட்டும் பலவித வருத்தங்களை அனுபவித்தான். தான் கற்ற கல்வி மிகச் சிறிதாயிருந்தும் அவன்

அதைத் தகுதியாக உபயோகப்படுத்தி மேலுமேலும் விர்த்திசெய்து வந்தான்; மேலும் தான் வறுமையினல் மிகுதியும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தும், தன்னேடிருப்பவர்கள் அப்போதுக்கப்போது தங்களுக்கு வேண்டியவைகளைத் தேடிக்கொள்வதுதவிர வேறு பெரிய காரியங்களைப்பற்றி யோசிக்கும் தகுதியற்றவர்களாயிருந்தும், அவன்மாத்திரம் தான் கொண்ட சில உயர்ந்த கருத்துக்களை மனதைவிட்டு நீங்கவிடாமலே வைத்துக்கொண்டிருந்தான்.

போர்த்துகல் தேசத்தரசன் செய்யும் காரியங்களைக்குறித்தும், அதிசயமான அநேக விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுவதைக்குறித்தும் அக்காலத்தில் ஜனங்கள் வியந்துபேசிக்கொள்வார்கள். சில தேசங்களில் சிவக்கக் காய்ந்திருக்கும் பாறைகளும் கொதிக்கும் சமுத்திரமும் உண்டென்றும், ஜனங்கள் தங்கள் தலைகளைக் கைகளுக்குள் வளைத்து வைத்துக்கொண்டு நடக்கிறார்கள் என்றும் சொல்லுவார்கள். சில நாடுகளில் பட்டணங்களிலுள்ள வீதிகள், பனித்துளிகள் எவ்வளவு சாதாரணமாக இருக்குமோ அவ்வளவு சாதாரணமாக, தங்கத்தகடுகளாலும் ரத்தினங்களாலும் தளவரிசை செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் பேசிக்கொள்வதுமுண்டு. கொலம்பசு இவற்றையெல்லாம் கேட்டு ஆச்சரியப்பட்டு, இவை உண்மையாயிருக்கக்கூடுமாவென்று ஆலோசிக்கலாயினன். சமுத்திரத்திற்கு அப்புறம் இன்னும் கண்டுபிடிக்கப்படாத பூமிகள் இருக்கக்கூடுமாவென்று ஆராய்ந்ததில், அப்படிக்கில்லாவிட்டால், சமுத்திரத்தின் அலைகளால் அடித்துக்கொண்டு வரப்படுவனவாகத் தானும் கேள்விப்பட்டிருந்த ஓர்வித மூங்கில்களும், ஆபிரிக்காகண்டத்துக் கடற்கரையில் அடித்துக்கொண்டுவந்த சித்திரவேலைசெய்த மரத்துண்டும் எவ்விடத்திலிருந்து வந்திருக்கக்கூடுமென்றும், அக்காலத்தில் ஜனங்கள் நம்பியிருந்தபடி பூமி தட்டையாய் ஒரே பரப்பாக இருக்கிறதென்பது உண்மையாயிருக்கக்கூடுமாவென்றும் இவனுக்குள் சந்தேகம் பிறந்தது. இவ்விஷயங்களெல்லாவற்றையும்பற்றிப் பகற்காலத்தில் அவன் எண்ணமிட்டுக்கொண்டிருந்ததுமல்லாமல் இரவில் கனவிலும் அவ்விஷயங்களை மறந்தவனல்ல.

நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்டவைகளைப்பற்றிய சங்கதிகளை நன்றாய்த் தெரிந்துகொள்வதன்பொருட்டு லிஸ்பன்நகரத்துக்குச் சென்ற கொலம்பசு அவ்விடத்திலேயே நிலைத்து, சென்ற சில நாள்களுக்குள் அவ்விடத்திலுள்ள சௌரியவானன ஓர் கப்பற்காரனுடைய குமாரத்தியை விவாகம்செய்துகொண்டான். இக்கலியாணத்தினல், தன் எண்ணங்களை நிறைவேற்றுவதற்குரிய உதவிகளைச் செய்யக்கூடிய சில நட்பு இவனுக்குக் கிடைத்தது. பூமியானது தட்டையுருவாயில்லாமல் உருண்டைவடிவாய் இருக்கவேண்டுமென்றும், மேற்கு மகாசமுத்திரத்திற்கு அப்புறம் இதுவரையும் காணப்படாத தேசம் இருக்கவேண்டுமென்றும், இந்து

தேசத்திற்குப் போவதற்கு மேற்காக ஓர் மார்க்கம் இருக்கவேண்டு மென்றும் உறுதியாய் நம்பினதுமல்லாமல், அது தன்னால் கண்டு பிடிக்கப்படவேண்டுமென்பது கடவுளுடைய கட்டளையென்றும் தன் நெஞ்சில் நன்றாய் ஊன்றியிருந்தமையால், அவ்விஷயத்திலேயே அவன் தன் வாழ்நாளை முற்றும் செலுத்தத் துணிந்தான்.

இச்சமயத்தில் கொலம்பசுக்குச் சில சங்கடங்கள் நேர்ந்தன: வியாதியும் மரணமும் அவன் குடும்பத்தைப் பிடித்தன; ஒன்றன் மேலொன்றாகப் பல இடுக்கண்கள் அவனை வருத்தின; அவன் மனைவி தேகவியோகமடைந்தாள். அக்காலத்தில் அத்தேசத்தை அழிவுசெய்துகொண்டிருந்த போரினால் அவன் தன் சொத்துக்களை யெல்லாம் இழந்து, தன் சிறு குமாரன் தவிர வேறு ஆதரவற்று, வீட்டைத் துறந்து வெளிப்படும்படி நேரிட்டு, ஓர் சந்நியாசி நிலைமையடைந்து, முக்கியமாய்த் தன் சிறு குழந்தையின்பொருட்டு இரந்து ஜீவிக்கலானான். அக்காலத்திலும் புதியதேசம் ஒன்றைக் கண்டுபிடிக்கவேண்டுமென்னும் எண்ணம் இவன் மனதைவிட்டு விலகவில்லை.

மேற்குத்திசையில் ஒரு புதிய கண்டம் இருக்கவேண்டும், அல்லது அவ்வழியாக இந்தியாவுக்குப் போக ஓர் சமீபமார்க்கம் இருக்க வேண்டுமென்று தான் உறுதிகொண்டிருந்ததைப் பரிசோதித்தறியும் பொருட்டு, கப்பல்யாத்திரை செய்வற்கு ஓர் உபாயத்தைப் போர்த்துகல் தேசத்தரசனுக்கு அறிவித்தான். அவ்வரசனோ அதைப் பாராமுகஞ்செய்ததுமல்லாமல் கடைசியாக அம்முயற்சி பயனற்றதாகுமென்று மறுத்துவிட்டான். அதன்மீது கொலம்பசு இவ்விஷயத்தைப்பற்றி ஸ்பெயின்தேசத்து அரசியினிடத்தில் விண்ணப்பஞ் செய்யத் தீர்மானித்து, அத்தேசத்து ராஜதானிக்கு மெல்லமெல்லப் போய்ச்சேர்ந்தான். அவ்விடத்தில் அநேக வருஷகாலம் அதிக கஷ்டத்தோடு வசித்துக்கொண்டு, சமயம் நேரிட்டபோதெல்லாம் தன் கருத்தை இராணியாருக்கு வெளிப்படுத்திக்கொண்டுவந்தான். தன் கருத்தை நிறைவேற்றுவதற்கு மார்க்கமில்லையென்று பல முறை மனஞ்சலித்து வெறுப்படையும்படி நேரிட்டும், தன் முயற்சியைத் தளரவிடாமல் மிகுதியும் முயற்சிசெய்துவந்தமையால், கடைசியாக இசபெல்லாள் என்னும் இராணியார் மனமிளகி, தன் மந்திரிகள் தன்னை எவ்வளவோ அதைரியப்படுத்தியும் அவர்கள் சொல்லைத் தள்ளிவிட்டு, தன் சொந்த ஆபரணங்களைக் கொதுவை வைத்து வேண்டிய திரவியம் கடன்வாங்கி, இம்முயற்சியின் லாப நஷ்டத்தை என் சொந்தமாகிய காஷ்டீல் தேசமடையும்படி நான் கொலம்பசுவைப் பிரயாணஞ்செய்தனுப்புவேன் என்றாள்.

அப்படியே 1492-ஆ ஏப்பிரல்மீ 17உ ஓர் உடன்படிக்கை நடந்தது. அவ்வுடன்படிக்கையில் கொலம்பஸ் ஸ்பெயின்தேசத்து இராணியார்க்கு ஓர் உண்மையான தொண்டனாக நடந்துகொள்

வதாய் ஒப்புக்கொண்டான். அவ்வருஷத்திலேயே ஆகஸ்டுமீ 3௨ மூன்று சிறிய கப்பல்களோடு கொலம்பசு புறப்பட்டு, அநேக நாள் வரையும் தரையின் குறிப்பைச் சிறிதேனும் காணுமலே கப்பல்களை நடத்திக்கொண்டுபோனான். இந்த யாத்திரையில் அவன் பல வகைத் துன்பங்களை அனுபவித்தான். அவனுடன் கூடவந்த கப்பற்காரர்கள் தங்கள் தேசத்தையும் மனைவிமக்களையும் விட்டு இவன் பேச்சை நம்பிவந்து மோசம்போனோமேயென்று துயாமுற்று, இவனை நொந்துகொண்டு, வெளிப்படையாக வைததுமல்லாமல், ஓர் சமயத்தில் இவனைத் தூக்கிக் கடலில் எறிந்துவிட்டுக் கப்பல்களைத் திருப்பிக்கொண்டு தங்கள் தேசத்திற்குப் போய்ச் சேரலாமென்றுகூடத் தீர்மானித்தார்கள். கடைசியாக இன்னும் மூன்றுதினங்களுக்குள் தரையைக் காணுவிடின் கப்பல்களைத் திருப்பிக் கொண்டு உங்களை ஸ்பெயின்தேசத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேனென்று அவனை முழங்காலிட்டுப் பயபத்தியோடு சத்தியஞ்செய்துகொடுக்கும்படியாகவும் செய்தார்கள்.

இப்படியிருக்க ஒருநாள் இராத்திரி இரண்டுமணிக்குக் கரையில் ஓர் விளக்கு மினுக்குமினுக்கென்று தெரியவந்தது. அதைக் கண்டபோது கொலம்பசுவுக்கு சந்தோஷம் உண்டானதை என்னென்று சொல்லலாம்! அதைப் பார்த்ததற்கு அடையாளமாக உடனே ஓர் பீரங்கி வெடிதீர்த்து, பாய்களை இறக்கிக் கப்பல்களை நிறுத்தி, இரா முழுவதும் உறங்காமல் பேச்சுமூச்சின்றி அதிக ஆவலோடு எல்லோரும் சூரியோதயத்தை எதிர்பார்த்திருந்தனர். விடியல்கண்டவுடனே தங்களுக்குமுன்பாக ஓர் தீவும் அதில் ஜனங்களும் மரங்களும் இருக்கிறதைப் பார்த்து எல்லாரும் "தரை தரை" என்று ஓர் சந்தோஷ ஆரவாரஞ்செய்தனர். பிறகு கொலம்பசுவும் மற்றக் கப்பற்காரர்களும் ஸ்பெயின்தேசத்து அரசனது குறிக்கொடியைப் பிடித்துக்கொண்டு அத்தீவிலிறங்க, கப்பற்காரர்களெல்லாம் கொலம்பசுவை "அட்மிரல்" என்னும் பட்டத்தைக்கொண்டு வாழ்த்தி அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக வாக்குத்தத்தம்செய்தார்கள். அக்கரை இந்துதேசத்தின் கீழ்க்கரையென்று அவர்கள் உறுதியாக நம்பியிருந்தமையால் அதுமுதல் அத்தேசத்தார்களுக்கு இந்தியர்கள் என்று பேரிட்டார்கள். அக்காலத்தில் இந்துதேசத்தை மகாகான் என்னும் மகம்மதியன் ஆண்டுகொண்டிருந்தானென்பது பிரசித்தமாயிருந்தபடியால், அச்சக்கரவர்த்தி அத்தீவிலிருப்பானென்று எண்ணிக் கொலம்பசு அவனிடத்திற்குத் தூதர்களை அனுப்பினான்; அவர்களோ அப்படிப்பட்ட சக்கரவர்த்தி ஒருவனும் இல்லையென்று திரும்பி வந்துவிட்டார்கள். முடிவில் அவர்கள் இறங்கின இடம் பெரிய கண்டமல்லவென்றும், பல விருக்ஷங்களும் கனிகளும் புஷ்பங்களும் பக்ஷிகளும் நிறைந்துள்ள மேற்கு இந்தியதீவுகளென்று இப்போது சொல்லப்படுகின்ற பற்பல தீவுகளில் அது ஒன்றென்

றும் தெரியவந்தது; பிறகு சிறிது சிறிது சென்று கொலம்பசு அமெரிக்காக்கண்டத்தையும் கண்டுபிடித்தான்.

கொலம்பசு தான் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றி வெற்றியாளனாக ஸ்பெயின்தேசத்துக்குத் திரும்பிவந்தவுடனே ஜனங்கள் போய் அவனைச் சூழ்ந்துகொண்டு உபசரித்ததுமல்லாமல், அவன் புதிய தீவுகளிலிருந்து கொண்டுவந்த நாகரிகமற்ற ஆறு மனிதர்களையும், பல மிருகங்களையும், அழகிய பறவைகளையும், புதுமையான செடிகளையும், பொன்னாபரணங்களையும் ஒன்றின்பின் ஒன்றாக நிறுத்தி, ஓர் பெரிய ஊர்கோலமாக அவனைப் பார்ஸிலோனாவுக்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள். அவ்விடத்திலுள்ள அரண்மனையில் பெர்டிநாண்டு என்னும் அரசனும் இசபெல்லாள் என்னும் அரசியும், பொன்னாலமைத்த ஓர் விதானத்தின்கீழ் வீற்றிருந்து கொலம்பசுவை வரவழைத்து எல்லோருக்குமுன்பாக முழங்கால்படியிட்டு, புதிய கண்டமொன்று கண்டுபிடித்ததைப்பற்றியும், கொலம்பசுவினது மனோதைரியத்தைப்பற்றியும் கடவுளுக்கு வந்தனம் செலுத்தினார்கள்.

ஸ்பெயின் தேசத்துக் கிராண்டு கார்டினல் என்னும் பிரபுவின் வீட்டில் கொலம்பஸ் ஒருநாள் விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், இவன் எண்ணங்களெல்லாம் நிறைவேறின விஷயத்தில் இவனிடத்தில் அழுக்காறடைந்திருந்தவர்களில் ஒருவன் புதிய கண்டத்தைக் கண்டுபிடித்ததில் விசேஷம் என்னவிருக்கிறது, வேறே யாரும் இவனைப்போலச் சுலபமாக அம்மார்க்கத்தைக் கண்டுபிடித்திருக்கமாட்டார்களா என்று கேட்டான். அதற்குப் பிரதியாகக் கொலம்பசு, அங்கு வந்திருந்தவர்கள் ஒவ்வொருவரையும் இந்த முட்டையை மேசையின்மீது நேராக நிற்கச்செய்வீராவென்று வினாவினான்.

அவர்களில் ஒருவனாலும் அவ்விதம் செய்ய முடியாமற் போய்விட்டது; அதன்பின்பு கொலம்பசு அதன் ஒரு முனையைச் சிதையச்செய்து நேராக நிறுத்தி, இதோ நான் செய்துகாட்டினேனல்லவா, இனி நீங்கள் அவ்வாறு செய்வது எளிதுதான் என்றான். அதைப்பார்த்து மற்றவர்களும் அப்படியே முட்டையை உணவுப் பலகையின்மீது நேராக நிற்கச்செய்தார்கள்.

அது அதிக சுலபமானதாயினும் அப்புத்திசாலிகளில் ஒருவனுக்காயினும் கொலம்பசு செய்துகாட்டுகிறவரையில் அந்த யுக்தி தோன்றவில்லை. ஆகையால் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டபிறகு அதைக் கண்டுபிடிப்பது எவர்க்கும் எளிதுதான்; ஒரு புதிய கண்டத்தை முதலில் கண்டுபிடிப்பது எவ்வளவு கடினமான காரியம்! கொலம்பசு அனுபவித்த இடுக்கண்களையும் உடல்வருத்தங்களையும் யோசிக்கையில், அது மிகுதியும் சாகசகாரியமென்று யார்தாம் ஆச்சரியப் படமாட்டார்கள்!

ஒரு கட்டி உப்பு.

இவ்வுலகத்தில் கடவுளால் படைக்கப்பட்ட பொருள்கள் பல வுளவாயினும் அவற்றுள் உப்பைப்பார்க்கிலும் அதிகமாக நமக்கு நாள்தோறும் உபயோகப்படத்தக்கது வேறில்லை. மேற்பார்வைக்கு அது நமக்கு அற்பமாகத் தோன்றினும், அதன் சொரூபங்களை ஆழ்ந்து விசாரிக்க விசாரிக்க, அதைப்போல அவ்வளவு விநோதம் உண்டாக்கத்தக்க பொருள் வேறில்லையெனவும் தெளிவாகும்.

உப்பு உணவுக்கு இன்றியமையாத பொருளென நெடுங்காலமாய் அனைவராலும் கொண்டாடப்பட்டிருக்கிறது. "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே போடவேண்டும்" என்கிற பழமொழிப்படி, உப்பில்லாவிட்டால் எந்த உணவும் உருசிகொடாது. மேலும் உப்பில்லாவிட்டால் நம்முடைய தேகசவுக்கியம்மாத்திரமேயல்ல, பிராணனும் தேகத்தில் நெடுநாள் நிலைபெற்றிராது. பதார்த்தங்களைக் கெட்டுப்போகாமல் பலநாள் காப்பாற்றி வைத்துக்கொண்டிருக்கத்தக்க குணமும் உப்புக்கு உண்டு. உப்புக்கு இவ்வற்புதமான குணம் உண்டென்பதை, பதார்த்தங்களை ஊறுகாய் முதலியனவாய் உப்பில் பதப்படுத்தி நெடுங்காலமாக வழங்கிவருகிற வழக்கத்தினாலேயே கண்டுகொள்ளலாம். அநேகர் உப்பைத் தேவதைகளுக்கு உபயோகமான பொருளென்று கொண்டாடுகின்றனர். இப்போதும் அரேபியர் முதலானோர் உப்பை உதாரகுணத்துக்கு ஒரு அறிகுறியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவனுடைய உப்பைத் தின்று அவனுக்கே துரோகம் நினைக்கலாமா என்கிற பெரியோர் வாக்கியத்திலும், பல பண்டங்களுக்கும் பிரதியாய் உப்பே சொல்லப்பட்டிருப்பதனால், எல்லாப் பதார்த்தங்களிலும் உப்பு முக்கியமானதெனத் தெளிவாகின்றது. சில தேசங்களில் வழிபறியாளரான கொடியர்கள்கூட அவ்வழியாக வருகிற வழிப்போக்கன் எவனாவது தம்முடைய உப்பைத் தின்றவனானால் அவனுக்கு ஒரு தீங்குஞ்செய்வதில்லை.

உப்பானது பிராணிகளுக்குமாத்திரமேயன்றிச் செடிகள் வளருவதற்கும் இன்றியமையாதது. மேலும் இது தேகத்துக்கு ஆரோக்கியம் தரும் குணமுடையதாகிப் பல நோய்களை நீக்குகின்றது. சரீரத்தில் உப்பின் சாரம் குறைவுபடுவதனாலேயே விஷபேதி முதலான வியாதிகள் உண்டாகின்றனவெனக் கண்டிருக்கின்றனர். அதனாலேயே வைத்தியர்கள் அந்நோய்கண்டிருக்கும் காலத்தில் உப்பை அளவுக்கு அதிகமாய் உணவுகளில் சேர்த்துக்கொள்ளும்படி புத்தி சொல்லுகிறார்கள். மனிததேகத்திலுள்ள எலும்பு மாம்சம் ரத்தம் முதலிய எல்லா உறுப்புகளிலும் உப்பு அமைந்திருக்கின்றது. இது

மாத்திரமேயல்ல: ஜீவனுள்ளது இல்லாதது ஆகிய இவ்வுலகத்தி லுள்ள எல்லாப் பொருள்களிலும் உப்பின்சாரம் வியாபித்திருக்கின் றது. இப்படி உலகத்துக்கெல்லாம் மிகவும் உபயோகமான பொரு ளாயிருக்கின்ற இவ்வுப்பின் சொரூபம் இப்படிப்பட்டதென்பதை அடியில் ஒருவாறு எடுத்தெழுதுவோம்.

உப்புக்கும் நீர்க்கும் ஒற்றுமை மிகவும் அதிகம். அதாவது, உப்பு தண்ணீரில்தானே கரைந்து நீரோடு நீராய்ப்போகும் குண முள்ளது. நூறுபங்கு தண்ணீரில் முப்பத்தைந்துபங்கு உப்பு கரை யும். ஆனால் இதில் ஓர் அதிசயமுண்டு: உப்பைக் கரைக்கும்படி யான குணம் வெந்நீர்க்கு எவ்வளவு உண்டோ அவ்வளவு குளிர் ந்த நீருக்கும் உண்டு. உலகத்தில் சாதாரணமாய்க் குளிர்நீரைவிட வெந்நீர்க்கே அதிகமாய்க் கரைக்கும் குணமானாலும், அந்தச் சாமா னிய விதிக்கு இது ஒரு விசேஷமாய் இருக்கிறது. இப்படி உப்புக் கும் நீர்க்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டாயிருப்பதால் விசித் திரமும் உபயோகமுமான பல காரியங்கள் உலகத்தில் நடந்தேறு கின்றன.

கீழே குறிக்கும் சுலபமான ஒரு சோதனையினால் இவ்விஷயத் தைத் தெளிவாய்க் கண்டுகொள்ளலாம். இரண்டு கண்ணாடி புட்டி களை எடுத்து அவை இரண்டிலும் தண்ணீர் ஊற்றிப் பின்பு அவற் றுள் ஒன்றில் கொஞ்சம் உப்பைக் கரைத்து, பிறகு அவை இரண்டி லும் தண்ணீர் கலங்கலாய்ப் போகும்படி சிறு களிமண்ணை நன்றாய்க் கரைத்துக் கலக்கிவிடுவோம். உப்புப்போட்ட தண்ணீரில் தோய் த்த குச்சியையாவது விரலையாவது மற்றொரு தண்ணீரில் தோய்க் காமல் ஜாக்கிரதையாயிருங்கள். தனித்தனி அவைகளை நன்றாய்க் கலக்கிவிட்டபிறகு அவ்விரண்டு பாத்திரங்களையும் தனியே ஒரு புறத்தில் வைத்து எவ்வளவு நாழிகைக்குள் அவ்விரண்டிலுள்ள கலங்கின நீரும் தெளிகிறதென்று பார்ப்போம். பார்த்துக்கொண்டே யிருக்கையில் அவ்விரண்டுக்கும் வேற்றுமை வெகு சீக்கிரத்திலேயே தோன்றும்: உப்புகலந்த தண்ணீர் அதில் கலந்த உப்பின் அள வுக்கேற்றபடி இரண்டொரு நிமிஷத்திலேயே தெளிந்துபோம்; மற் றொன்று மிகவும் நல்லதண்ணீராய் இருக்குமானால் அது தெளிய ஒன்று ஒன்றரைநாள் வரையுங்கூடச் செல்லும். உப்புக்குத் தண் ணீரை இழுத்துக்கொள்ளும்படியான தன்மையிருப்பதால், அது அத்தண்ணீரில் களிமண் கலந்திருக்கவொட்டாமல் அதைச் சீக்கி ரமே விலக்கிவிடுகிறதென்பது இதனால் தெளிவாகின்றது. உப்புக்கு உள்ள இவ்வதிசயமான குணத்தினால் உலகத்தில் உண்டாகும் நன்மைகள் மிகவும் சிறந்தவை. கடல்நீரில் உப்பு விசேஷமாய்க் கலந்திருக்கிறதென்பதை எல்லோரும் நன்றாய் அறிவார்களல்லவா? சராசரி நூற்றுக்கு மூன்றுவீதம் கடல்நீரில் உப்பு சேர்ந்திருக்கி

றது. அதாவது கடல்நீர், இங்கே சொல்லிய கண்ணுடி புட்டியி லுள்ள களிமண் முதலிய அழுக்குகளைத் தன்னிடத்தில் நிற்க வொட்டாமல் விலக்குகிற உப்புநீர்போலாகின்றது. ஆதலின் உப் புக்குள்ள இச்செயல்தான் கடல்நீரை எப்போதும் தெளிவாகவே வைத்துக்கொண்டிருக்கிறது; கடலில் சேர்கிற நுட்பமான மண் மணல் முதலியவைகளெல்லாம் அவ்வுப்பின் செயலால் உடனே நீரைவிட்டுப் பிரித்து கடலின் அடிப்புறத்திலே சேருகின்றன. இவ்வுப்பு இல்லாவிட்டால் கடல்நீர் எப்போதும் கலங்கியே கிடக்கவேண்டுவதுதான். உலகத்திலுள்ள அநேகமாயிரம் நதிக ளும் அங்கங்கே அரித்தெடுத்த அளவற்ற கல்மணல்களை வாரிக் கொண்டுபோய்க் கடலில் சேர்க்கின்றனவென்பது அனைவர்க்கும் தெரியுமே. வெள்ளம் வருகிறகாலத்தில் நமக்குச் சமீபத்திலு ள்ள சிற்ருறுகளிலேயே, வழிகளிலே வந்து சேருகிற பலவகை மண்ணும் மணலும் கலந்து, நீர் கலங்கிச் சிவந்து ஓடக்காண் கிருேம். தேசாந்தரங்களிலுள்ள மிகப் பெரிதான சில மகா நதி கள் ஒருபோதும் தெளியாமல், வருஷம் முழுதும் மலை குன்று முதலியவற்றினின்றும் சிதைந்து பொடியுண்ட அளவற்ற தூள் கலந்து கலங்கியே ஓடுகின்றன. இவ்வளவு கலங்கல் நீரும் கட லிலேதானே போய் விழுகின்றன. அமெரிக்கா கண்டத்திலுள்ள மிகப் பெரிதான மிஸ்ஸிஸிபி என்னும் ஆற்று நீர் எப்போதும் கலங் கியே இருக்கும். அவ்வாற்றினின்றும் ஒரு பாத்திரம் நிறைய நீரெடுத்து வைப்போமானுல், சிலநாள்வரைக்கும் அது நன்ருய்த் தெளியாமல் அப்படியேதான் இருக்கும். அந்நீர் கடல்சேர்ந்த போது எப்படியாகிறதென்று யோசிப்போம். அந்தக் கலங்கின நீரோடு கொஞ்சம் கடல்நீரைக் கலந்துபார்த்தால் இவ்விஷயம் தெளி வாய்த் தெரியும். கடல்நீர் சேர்த்தால் அப்போது அதில் கலங் திருக்கும் வண்டலெல்லாம் சீக்கிரமே தண்ணீரை விட்டுப் பிரிந்து அடியிலே படிந்துபோக, நீர் நன்ருய்த் தெளிந்துபோம். நதிகளின் முகத்துவாரங்களில் நடக்கிற காரியம் இப்படிப்பட்டதுதான். ஆற் றுநீரும் கடல்நீரும் அங்கே சேரும்போது உடனே ஆற்றுநீரில் கலந்திருக்கும் வண்டல்களெல்லாம் உடனே அடியிற்படிய நீர் தெளிவாகின்றது. இக்காரணத்தினுலேதான் நதிகளின் சங்கமஸ்தா னங்களிலும் கப்பல் ரக்ஷணஸ்தானங்களிலும் அடித்தரையில் வண் டலில்லாமல் வைத்திருப்பது மிகவும் அசாத்தியமாகி, அடிக்கடி யந்திரங்களைக்கொண்டு அவற்றை அப்புறப்படுத்தவேண்டியதாகின் றது. இல்லாவிட்டால் அவ்விடங்கள் அவ்வண்டலினுல் கப்பல் யாத்திரைசெய்யக் கூடாதவையாகும்.

இருப்புப்பாதை முதலியவிடங்களில் பாதைகளும் அணைக ளும் போடும் வகையை வியப்புடன் அநேகர் பார்த்திருக்கலாம். அதற்காக ஏற்பட்டிருக்கும் வேலைக்காரர்கள் பாதைபோடவேண்

டிய இடத்திலே நின்று, மண்வண்டிகள் மண்ணை ஏற்றிக்கொண்டு வேகமாய் வந்து அங்கே நின்றபோது, அவ்வண்டிகளின் அடைப்புப் பலகைகளைத் திறந்துவிட்டு வேண்டியவிடத்தில் அவற்றிலுள்ள மண்ணைக் கொட்டிக்கொள்கிறார்கள். அப்போது அம்மண்ணானது கொஞ்சம் கொஞ்சமாய்த் தரையிலே விழ, பாதையும் பெரிதாகின்றதல்லவா? இவ்விதமான செய்கையே கடலிலே நதியின் முகத்துவாரத்தில் நடக்கின்றது. எப்படியெனில், முகத்துவாரத்தண்டை கடல்நீரிலே கலந்திருக்கும் உப்புத்துளிகளை, மண்ணை வாங்கிக் கொட்டிக்கொள்ள காத்திருக்கும் சிறு வேலைக்காரர்களாக வைத்துக் கொள்வோம். இந்த உப்புத்துளிகள் வண்டலோடுகூடப் பெருகிவருகின்ற வெள்ளத்தை ஏற்றுக்கொள்ளக் காத்திருந்து அது தன்னண்டை வந்தவுடனே அதிலுள்ள வண்டலையெல்லாம் தரையில் படியச் செய்கின்றன. இச்செய்கை இராப்பகல் ஓயாமல் எப்போதும் நடந்துகொண்டிருக்கின்றமையால், ஒவ்வொரு நீர்த்துளியிலுள்ள மண் பொடியும் மிகவும் சொற்பமானாலும் அந்நீர்த்துளிகள் அளவற்று வந்துவீழ்வதுபற்றி, அவற்றினின்றும் கடலின் உப்புவாங்கிக்கொள்கிற வண்டல் கடலின் அடித்தரையில் படியப்படிய, அதனாலாகிய மேடு வருஷந்தோறும் கொஞ்சங்கொஞ்சமாய் உயர்ந்து நீர்மட்டத்துக்குமேல் எழுந்து கடலுக்கு அப்புறமும் பரந்து கடைசியில் மிகப் பெரிதாகிக் கடலோரத்தில் ஒரு சிறு திட்டுப்போலாகிறது. பின்பு நாளளவிலே அங்கே செடிகள் முளைக்கத் தலைப்பட்டு அவற்றின் வேர் ஊறி அதனால் அந்த மேடு அழுந்தி உறுதிப்படுகின்றது; கடலின் அலைகளாலும் காற்றினாலும் தேசாந்தரங்களிலிருந்து அடித்துக் கொண்டு வரப்பெற்ற பலவகை விதைகள் இத்தீவிலே படிய, அவற்றினின்றும் மரம் செடி புதர் முதலிய விருக்ஷவகைகளெல்லாம் முளைத்தெழுகின்றன; பிறகு அந்நிழல்தாக்குகளில் பல மிருகங்களும் பறவைகளும் குடிகொள்ளுகின்றன; அவைகளைத் தொடர்ந்து மனிதர்களும் அங்கு இடம்தேடிச் சென்று குடிகொள்கிறார்கள். பிறகு காலக்கிரமத்திலே நெல்வயல்களும் நகரங்களும் கப்பல் கப்பல்துறைகளும் உடையதாகி, நெடுநாளாய்ப் பயங்கரமாகக் கடல்நீர் அலைத்துக்கொண்டிருந்த அவ்விடம், மிகச் சிறந்ததோர் பூகண்டமாகி, இயற்கைச்செயலினால் சிதைந்துபோன தேசாந்தரங்களிலுள்ளவர்களுக்கு ஏற்ற வாஸஸ்தானமாகின்றது. இவ்வாறு இவ்வுலகமாகிய, என்றும் ஓயாமல் வேலை நடந்தேறுகின்ற, ஒரு பெரிய கைத்தொழிற்சாலையில், நமது சோற்றுக்குத் துணையாயிருக்கும் இச்சிறுபொருள் ஒரு தலைமைத்தொழிலாளியாய் இருக்கின்றது.

இச்சிறுவேலைக்காரர்களுடைய தொழில் இவ்வளவோடுமாத்திரமே முடிவுபெறுவதில்லை; மண்ணைக் கொட்டின வெற்றுவண்டிகள்போன்ற தெளிந்த நீர்த்துளிகளை, மறுபடி மண்ணேற்றிக் கொண்டு வரும்படி, மலையுச்சிகளுக்குக் கொண்டு செலுத்தவும் உத

வுகின்றனவெனத் தோன்றுகிறது. "ஆகாயத்தில் எப்போதும் கெட்டியான அணுக்கள் பறந்துகொண்டிருக்கின்றனவென்பது இல்லாவிடின், உலகத்தில் மழை பனி முதலிய ஒன்றும் இல்லாமலே போய்விடும்; ஏனெனில் அப்போது வாயுமண்டலத்தில் தங்கியிருக்கும் நீராவியெல்லாம் நிற்க ஆதாரமில்லாமல் அந்தக்ஷணமே பூமியில் விழுந்துபோம்படியாகும்" என்று ஒரு பண்டிதர் சொல்லியிருக்கிறார். இது யதார்த்தமாகவே இருக்குமாயின், அப்படி மழைத்துளிகளைக் கீழேவிழவொட்டாமல் ஆகாயத்திலேயே நிறுத்திக்கொள்பவை வெகுவாய் இவ்வுப்பின் அணுக்களே என்பதற்குச் சந்தேகம் இல்லை. மேலும் இப்படி நீர்க்கும் உப்புக்கும் உள்ள ஒற்றுமைதான் ஆகாயத்தில் அங்கங்கே பரவிக்கிடக்கும் நீராவிகளை ஒன்றாய்ச் சேர்த்து இறுக்கி அதிக கனமான நீர்த்துளிகளாக்கி மழைத்தாரைகளாய்த் தரையிலே விழும்படி செய்கிறதெனவும் விளங்குகிறது. பூதக்கண்ணாடிகொண்டு பார்க்கையில், நமது உடுப்புகளில் படிகிற தூளி, வீடுவாயில் பெருக்கிச் சேரும் குப்பை, தெருவிலும் ஆகாயத்திலும் பறக்கிற தூள் எல்லாவற்றிலும் உப்புகலந்திருக்கிறதெனத் தெளிவாய்த் தெரிகின்றது. ஆயின் இதெப்படியென்று நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை. இவ்வுப்புக்கு இருப்பிடமான சமுத்திரமானது தன்னுடைய நீர்த்துளிகளையும் நுரைகளையும் ஆகாயத்திலும் கரையோரங்களிலும் அலைகளால் வீசியெறிய, அந்நீர்த்துளிகளைக் காற்றானது பூமியெங்கும் அடித்துக்கொண்டுபோய் அந்நீர்த்துளிகளிலுள்ள அணுவடிவமான உப்புக்களை அங்கங்கே பற்றிப்போம்படி செய்கின்றது.

தண்ணீர்க்கும் உப்புக்கும் உள்ள இந்தச் சக்தியால் இன்னும் அநேகம் அதிசயமான காரியங்கள் உண்டாகின்றன. அவற்றிற்கு உதாரணமாய் ஒன்றை எடுத்துக் காட்டுவோம். தண்ணீர் அதிகமாய்க் குளிர்ச்சி பெறும்போது இறுகிக் கட்டிகட்டுகிறதல்லவா? நீர்த்துளிகளெல்லாம் ஒற்றுமைநயத்தால் ஒன்றோடொன்று சேர்ந்து நெருங்குவதனாலேதான் அப்படியாகின்றது. தண்ணீரில் உப்பைக் கலந்துவிடுவோமானால் அப்போது நீர் அவ்வளவாய் உறைவதில்லை; ஏனெனில், உப்பானது நீர்த்துளிகள் ஒன்றோடொன்று அதிகமாய் நெருங்கவொட்டாமல் விலக்குகின்றது. அதனாலேதான் கடல்நீர் அதிக சீக்கிரத்தில் கட்டியாய் உறைந்துபோகாமல் அப்படியே இருக்கின்றது. கடல்நீரில் உப்பில்லாவிட்டால் அது வெகுவாய் உறைந்துபோயே இருக்கும். அதிக குளிர்ச்சிபூமியான துருவத்தையடுத்த தேசங்களிற்போல் அதிகமாய் உறைந்துபோகாமல் இத்தேசத்துக் கடல்களைக் கப்பல்யாத்திரை முதலியவற்றிற்கு உபயோகமாகச் செய்வது மகோபகாரமல்லவா? உப்புக்குள்ள இக்குணத்தினால் மற்றொருகாரியமும் உண்டாகிறது. அதாவது, பனிக்கட்டியைப் பொடிபண்ணி அதனோடு கொஞ்சம் உப்புக் கலப்போ

மானுல், அப்போது நீர்த்துளிகளுக்குள்ள நெருங்கிய சம்பந்தம் போய் அது உருகி முன்போல நீராகின்றது. ஆனுல் அந்த கெட்டி பதார்த்தம் திரவமாகும்போது அதிலுள்ள உஷ்ணமெல்லாம்போய் அதிக குளிர்ச்சி உண்டாகிறதாதலால், அப்படி உருகின நீர் அதிக குளிர்ச்சியுடையதாய் இருக்கும்.

உப்பின் சொரூபத்தைப்பற்றி விசாரிக்கையில், அது ஒரு தனிப் பொருளல்ல, மிச்சிரமான பொருளெனத் தெளிவாகின்றது. அதைப் பரீக்ஷித்தறியும் வகை எப்படியெனில், ஒரு பாத்திரத் தில் கொஞ்சம் உப்பைப்போட்டு அதனோடு சிறிது கந்தகாமிலம் (Sulphuric acid) கலந்து அதன் ஆவி வெளிப்போகவொட்டாமல் மூடி ஒரு விளக்கின்மேல் வைத்து எரிப்போம்; எரிப்போமானுல் ரசாயனத்தொழிலொன்று அதில் நடந்தேறுகிறதென நாம் உடனே கண்டுகொள்வோம். எப்படியெனில், காய்ச்சும்போது அதினின்று எழும் ஆவியெல்லாம் வெளியெழுந்து தோய்ந்திருக்கும். அதி னின்றும் எழுகிற ஆவி வெளிப்போகாமல் ஒரு மெல்லிய கண்ணு டிக்குழாயின் வழியாய் மற்றொரு பாத்திரத்திற்போய்ச் சேரும்படி முன்னமே அதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கவேண்டும். அப் படித் தோய்ந்த உப்பின் ஆவியை எடுத்துப்பார்த்தால், அது அமிலத் தின் சாரம் கலந்ததாயிருப்பினும், முன் உப்போடுகலந்த கந்தகா மிலமல்லாமல் மற்றொரு வேறு பொருளாயிருக்கிறதெனத் தெரிய வரும். அதற்கு லவணஸாரம் (Spirits of salt) என்று பெயர். ஆவி எழுந்தபிறகு அடியில் தங்கிய உப்புப்பொருளை அப்புறம் எடுத்துவைத்து லவணஸாரத்தை மங்கனீஸ் என்னும் ஒருவகை லோகத்தின் நீலபஸ்மத்தை (Black Oxide of Manganese) கலந்து முன்போலவே காய்ச்சுவோமானுல் அதினின்றும் கொஞ்சம் மஞ் சள் கலந்த பசுமை நிறமுள்ள ஒருவகை வாயு உண்டாகும். அந்த வாயு மிகக் கெட்ட நாற்றமுடையது; அதை மோந்து உள்ளே புகச்செய்தால் மிகவும் அபாயம் விளையும்.

அந்த வாயுவுக்கு க்ளோரைன் (Chlorine) என்று பெயரிட் டிருக்கிறார்கள். க்ளோரைன் என்பதற்குப் பச்சையென்று பொரு ளாகையால் இப்பெயர் அதற்கு நிறம்பற்றிவந்தது. அந்த வாயு பலவிதங்களில் உபயோகமானது. அது மிச்சிரமானபொருளல்ல, தனிப்பொருளென்றே சொல்லுகின்றனர். அதன் தன்மை மிகவும் அதிசயமானது. என்னவெனில்,

காற்றுள்ளவிடத்தில் இருந்தால்தான் எந்தப் பொருளானுலும் எரியுமென்று அநேகர் சாதாரணமாய் எண்ணியிருக்கிறார்கள். இந்த க்ளோரைனுடைய குணத்தைப் பார்க்கும்போது அது அவசியமே இல்லையென்றும், எரிவதாவது அதிக வேகமாக நடந்தேறுகிற ரசா யனச் சேர்க்கை (Chemical Combination) யேயொழிய வேறல்ல வென்றும் தெளிவாகின்றது. க்ளோரைன் புட்டியில் சிறிது நிபாக்

கினியைச் (Phosphorus) செலுத்துவோமானால், அவ்வாயு நன்ருய்ப் பற்றிக்கொண்டு மிகவும் பிரகாசமாய் எரியக் காண்கிறேம்; அல்லது அதனுள் அஞ்சனக் கல் (Antimony) லின் தூள் கொஞ்சம் போட்டாலும் நெருப்புப்பற்றிக்கொள்ளும். முக்கியமாய் இந்த வாயு ஜலவாயுவோடு (Hydrogen) சேர்ந்து ஒத்திருக்கும் குணமுள்ளது; பிராணவாயு கரிவாயு இவற்றோடு சேரத்தக்கதன்று. இந்த க்ளோரானையும் ஜலவாயுவையும் சரியளவாகச் சேர்ப்போமானால் அவை நிழலிலே ஒன்ருய் ஒத்துக் கலக்கமாட்டா; வெயிலிலாவது வைக்கவேண்டும்; விளக்குச்சூடாவது ஏற்றவேண்டும். அப்படிச் செய்தால் உடனே கலந்துபோம்.

இப்படி இந்த க்ளோரான் ஜலவாயுவோடு கலக்கும் குணமுள்ளதாய் இருப்பதால், எப்படிப்பட்ட அழுக்கையும் எடுத்து வெளுக்கச்செய்கிற சக்தியுடையதாகின்றது. மரச்சாயத்திலுண்டாகும் கறைகளையெல்லாம் பற்றற எடுத்துவிடுகின்றது. இதற்கு இந்த உத்தமகுணம் இருப்பதால், துணிகளில் அச்சடித்தல், கடிதம் செய்தல் முதலிய பல கைத்தொழில்களுக்கு இதை முக்கியமாய் உபயோகப்படுத்துகிறார்கள். அப்படி உபயோகிப்பதனுல் அதிக நன்மை உண்டாகிறது. முன்னெல்லாம் ஒரு வாரம் அல்லது ஒரு மாதம்வரையிலுங்கூடத் தாமதப்பட்டுக்கொண்டிருந்த வியாபாரங்களெல்லாம் இதை உபயோகிக்கத் துவக்கினபிறகு இரண்டொரு மணிநேரத்திற்குள்ளேயே நன்ருய் முடிக்கப்படுகின்றன. அறுபது எழுபது வருஷங்களுக்குமுன்னே கடிதம் முதலியவைகளெல்லாம் பழுப்புநிறமுடையவையாகவே செய்யப்பட்டுவந்தன; இப்போது அவையெல்லாம் வெண்மையில் பனிக்கட்டியையும் தோற்கடிக்கின்றன. இப்படியாக, நமக்கு அற்பமாய்த் தோன்றுகிற உப்பின் ஒரு பகுதியான இப்பொருளை உபயோகிப்பதனுல் உலகத்தில் எங்கும் விசேஷமான நன்மையும் அழகும் உண்டாகின்றன.

இந்த க்ளோரான் வாயுவின் மற்றொரு மேன்மையான குணமாவது, தொத்துநோய்களை நீக்குவதாம். பிராணிகளுடைய தேகத்தினின்றும் உண்டாகும் விஷங்களையும், மற்றும் இதரமான துர்க்கந்தங்களையும் இது உடனே அழிக்கின்றது. ஆதலால் இந்தப் பொருள் நோயாளிகள் படுத்திருக்கும் அறைகளிலும் துர்க்கந்தமுள்ள சாக்கடைமுதலிய இடங்களிலும், தொத்துநோய் தங்கியிருக்கத்தக்க இதரமான இடங்களிலும் மிகவும் உபயோகமானது. சில வருஷங்களுக்குமுன்னே மாடுகளுக்குக் கோமாரிநோய் உண்டானபோது இதை விசேஷமாக உபயோகித்தார்கள். அதன்மேல் அந்த வியாதி அதிகமாய்ப் பரவாமல் அவ்வளவோடு அடங்கிப்போயிற்று.

உப்பைக் காய்ச்சும்போது அதினின்றும் மேலெழும் பொருளின் குணங்களை ஒருவாறு சொன்னேமே; அப்போது அடியில்

தங்கிநிற்கும் பொருளும் மிக்க உபயோகமானதுதான். அதில் பிரசித்தமான சோடா என்பது கலந்திருக்கிறது. அந்தச் சோடாவோடு கரியும் சுண்ணும்பும் கலந்து காய்ச்சினல், அதினின்றும் சோடா சாம்பலென்னும் ஒரு பொருள் உண்டாகின்றது. அந்தப் பொருள் சப்பும் கண்ணுடியும் செய்வது, அழுக்கு எடுப்பது, சாயமேற்றுவது, கடிதம் செய்வதுமுதலிய தொழில்களுக்கும், உலோகங்களைப் புடம்போடுவதற்கும் உபயோகிக்கப்படுகின்றது. இது வருஷந்தோறும் பாரம்பாரமாய் அபரிமிதமாக உண்டாக்கப்படுகின்றதாதலால், இதனுல் வெகுபெயருக்கு உழைக்க வேலை கிடைக்கிறது. முற்காலத்தில் ஸ்பெயின்தேசத்துக் கரையோரங்களிலும் இன்னும் இரண்டோரிடங்களிலும் விசேஷமாய்ச் செழித்து வளருகின்ற ஒருவிதச் செடியின் சாம்பலினின்றும் இந்தப் பொருளை உண்டாக்கிஞர்கள். ஆனுல் அப்படி எடுக்கப்பட்ட பொருள் மிகவும் சொற்பமாயிருந்தது. உப்பிலிருந்து இதை எடுக்கும்படியான வழியைப் புதிதாய்க் கண்டுபிடித்தபிறகுதான் வர்த்தகம் விசேஷமாக விருத்தியாகத் தலைப்பட்டது. இவ்விதமாய் சாஸ்திரவிஷயங்களைப் புதிதாய் கண்டுபிடிக்கக் கண்டுபிடிக்க, கைத்தொழில்கள் விசேஷமாய் விருத்தியாவதற்கு இடமுண்டாவதுமன்றி, உழைக்கின்றவர்களுக்கு வேலையும் அதிகமாய்க் கிடைக்கும்படியாகின்றது.

இதனுல், உப்பு ஒரு தனிப்பொருளல்ல, மூக்கடைக்கத்தக்க கெட்ட நாற்றமும் கொஞ்சம் மஞ்சள்கலந்த பசுமைநிறமும் மிகவும் உபயோகமான பல குணங்களுமுள்ள ஒரு பொருளும், வெளிக்காற்றிலே சுத்தமாய் வைத்திருக்கக்கூடாததும், தண்ணீரையும் எரியும்படி செய்வதும், பிராணவாயுவோடு மிகுந்த ஒற்றுமையுடையதுமான வெள்ளிபோன்ற வெண்மைநிறமுள்ள ஒரு பொருளும் ஆகிய இவ்விரண்டும் முக்கியமாய்ச் சேர்ந்து உண்டான மிச்சிரபதார்த்தமெனத் தெரியவருகின்றது. இப்பொருள்கள் ரசாயனவகையின் விசித்திரச் செயலால் நெருங்கி ஒன்றுய்ச் சேரும்போது, நமது உணவுக்கு உருசிகொடுக்கும் சாதாரணமான பொருளாகின்றன. நமது சோற்றுக்குத் துணையாய் மிகவும் மலிந்திருக்கிற அற்பமான பொருளில் இவ்வாறு பல விசித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. அது நமது சரீரத்தைச் சவுக்கியமான நிலையில் வைத்துக்காக்கின்றது; கடலைச் சுத்தமாயும் நிர்மலமாயும் வைத்திருக்கின்றது; புதிதாய்ப் பூமிகளை நிருமிக்கின்றது; விசேஷமாக மழைபெய்வித்துப் பூமிகளைச் செழிப்பிக்கின்றது; பதார்த்தங்கள் அழுகிக் கெட்டநாற்றமெடுக்கவொட்டாமல் தடுக்கின்றது; அதை அதன் பகுதிகளாகப் பிரித்தெடுக்கப் பலபேர்க்கு வேலைகொடுக்கின்றது; சணல் பருத்தி முதலியவற்றை அழுக்கெடுத்துச் சுத்திசெய்கின்றது; கடிதங்களை வெளுப்பாக்குகின்றது; நம்முடைய சரீரம் முதலியவற்றைச் சுத்திசெய்வதற்கு சப்பு உண்டாக்குகின்றது; அழகுசெய்யக் கண்ணு

டிகள் உண்டாக்குகின்றது. பலவாறு சொல்லியென்ன? இவ்வுப்பானது மன்னுயிர் வாழ்க்கைக்குரிய உலகவியாபாரங்ளெல்லாவற்றிலும் சம்பந்தமுடையதாகி, ஸ்ரீ மகாலக்ஷ்மிபோலத்தான் எங்கே போனாலும் அழகும் ஆரோக்கியமும் ஐசுவரியமும்கூடக் கொண்டு போகின்றது. எவர்க்கும் எளிதாய்த் தோன்றுகிற இவ்வுப்பிலேயே இவ்வளவு அருமை பெருமைகள் அமைந்திருக்கும்போது மற்றவைகளுக்குக் கேட்பானேன்? ஆதலால் ஈசுவர சிருஷ்டியில் அமைந்த எந்தப் பொருளையும் அற்பமென்று நாம் இகழலாகாது.

ஒரு தச்சனும் தையற்காரனும்

(தொடர்ச்சி.).

கண்தெரியாமல் வருந்தின தையற்காரனுக்குத் தெய்வகடாக்ஷத்தால் இரண்டு கண்களும் நன்றாய்த் தெரியவே, அவன் அதிக சந்தோஷமடைந்து பட்டணம்போகப் புறப்பட்டு ஒரு தடாகத்தைத் தாண்டிப்போனானெனச் சென்ற சஞ்சிகையில் சொல்லியிருக்கிறதல்லவா? அங்கிருந்து இரண்டோரடி போகையில் பெரிய விருக்ஷமொன்று இருந்தது. அதனடியிலிருந்த பொந்தில் பல தேனீக்கள் உள்ளே போவதும் வெளியே வருவதுமாயிருந்தன. அதுகண்டு அந்தத் தையற்காரன், நம்முடைய நற்காரியங்களுக்குக் கடவுள் இங்கேதான் வெகுமதிசெய்ய நினைத்திருக்கிறார்; இந்தத் தேன் கூட்டிலுள்ள தேனைக் குடித்துக் களைதெளியலாமென்று சொல்லிக் கொண்டே அதனருகே சென்றான். ஆயினும் அவன் இப்பேச்சைச் சொல்லி முடிப்பதற்குமுன்னமே அந்தத் தேன்கூட்டுக்கு அரசியான தேனீ அவனண்டைக்குப் பறந்தோடிவந்து, பையலே நீ சிறுபிள்ளைத்தனத்தால் தாறுமாறாய் ஏதாவது அநியாயம் செய்யப்போகிறாய்; என்னுடைய ஈக்களையாவது என் தேன்கூட்டையாவது தொடுவாயானால் உடனே உன் பிராணன் போய்விட்டதென்று நினைத்துக்கொள். நாங்கள் பதினாயிரம்பேராய் ஓடிவந்து உன்னுடம்பில் ஊசிநாட்ட இடமில்லாமல் கொட்டிக் குளம்பறித்துவிடுவோம். உன் வழியைப் பார்த்துக்கொண்டே நீ போய்ச் சேர்; சமயம்வரும்போது நானும் என்னாலியன்ற உதவி உனக்குச் செய்கிறேனென்று சொல்லிற்று. அதைக் கேட்டு அந்தத் தையற்காரன், இதென்ன துரதிர்ஷ்டம்? எங்கேபோனாலும் கைக்கு எட்டுகிறது வாய்க்கு எட்டவில்லையே என்று விசாரப்பட்டுக்கொண்டே பட்டணத்துக்குப் போனான். அப்போது நடுப்பகல். அங்கே ஒரு சத்திரத்தில் சாப்பாடு சித்தமாய்ச் சமைத்துவைத்திருந்தது. இவன் அந்தச் சத்திரத்துக்குள் நுழைந்து அங்கே ஒருவரும் இல்லாதிருப்பதுகண்டு இது கடவுளுடைய அனுக்கிரகந்தான் என்று

எண்ணி அங்கிருந்த உணவுகளை எடுத்து வயிறுரப் புசித்துவிட்டுப் பிறகு எங்கேயாவது ஒருவேலை தேடிக்கொள்ளும்படி வெளியே போனான். பட்டணத்தில் நாற்புறமும் சுற்றுகையில் அங்கு பெரிய மனிதன் அவனைப்பார்த்து இவன் மிக்க வல்லவனென்று தெரிந்து அவனைத் தன்னிடத்தில் ஒரு வேலைக்காரனாக வைத்துக் கொண்டான். முன்னமே அவன் தன் தையல் வேலையில் நன்றாய்ப் பழகியவனானதலால் சீக்கிரத்திலே மிக்க பிரசித்திபெற்றுப் பல கனவான்களுக்கும் பிரபுக்களுக்கும் சிறந்த உடைகள் தைத்துக் கொடுக்கலானான். யாவரும் அச்சிறுவனுடைய தையல்வேலையைப் பார்த்து வியந்து கொண்டாடினார்கள். இப்படியே அவன் நாளுக்கு நாள் விருத்தியடைந்து கடைசியில் ராஜாவினுடைய அந்தப்புரத்துத் தையற்காரனானான்.

எது எப்படியானாலும் தெய்வச்செயலை யார் அறியக்கூடும்! அதேதினத்தில் இந்தத் தையற்காரனுக்குப் பழைய தோழனான தச்சனும் அதே அரசனுக்கு மேசை நாற்காலிகள் செய்துகொடுக்கும் பெரிய உத்தியோகம் பெற்றான். அவன் இந்தத் தையற்காரனைப் பார்த்து, தான் குத்திக்கெடுத்துவிட்ட இவனுடைய இரண்டு கண்களும் நன்றாய்த் தெரிந்துபோயின என்று கண்டு, ஓகோ? இதென்ன விபரீதம்! கெட்டுப்போன கண்கள் மறுபடியும் யாருக்காவது முளைப்பதுண்டா? மேலும் இவன் நமக்குச் சரியான உத்தியோகஸ்தனாயும் வந்து சேர்ந்தானே. இனி இவன் நம்மைப் பழிவாங்காமல் விடான். அதற்கு முன்னமே நாம் முயன்று இவனை நம்முடைய வலையில் சிக்கிக்கொள்ளச் செய்யவேண்டுமென்று எண்ணினான். பிறர்க்குக் கேடுநினைப்பவன் தானே கெடுதியடைவானென்பது அவனுக்குத் தெரியாது. அதனால் தச்சன் அன்றையதினம் மாலையில் தான் வேலைசெய்துவிட்டு வரும்போது அரசனிடத்திற்குப் போய், காதோடு ரகசியமாய் ஒரு துர்ப்போதனை செய்தான். அதாவது: மகாப்பிரபுவே, ஒரு விண்ணப்பம் செய்கிறேன், இப்பேதையினிடத்தில் சித்தமிரங்கவேண்டும். இந்தத் தையற்காரப் பையல் தனக்குச் சரி ஒருவரும் இல்லையென்று அதிக அகங்காரம்கொண்டிருக்கிறான்; நெடுநாளைக்கு முன்னே காணாமற்போன தங்கள் ராஜகிரீடத்தைத் தான் தேடவல்லவன் என்று அங்கங்கே பெருமை பேசுகிறான் என்றான்.

அதைக் கேட்டு அரசன் அப்படியா, இத்தன்மையான திறமையுள்ளவன் ஒருவன் நமக்குக் கிடைத்தது நம்முடைய பாக்கிய விசேஷமே என்று சொல்லிச் சந்தோஷமடைந்து, அவனை மறுநாள் காலையில் தன்னிடம் வரவழைக்கக் கட்டளையிட்டான். அப்படியே தையற்காரன் வந்தபோது ராஜா அவனைப்பார்த்து, நீ பெருமை பேசினபடியே காணாமற்போன ராஜகிரீடத்தைக் கூடிய சீக்கிரத்தில்

தேடிக்கொண்டுவந்து கொடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் இங்கே எப்போதும் தலைகாட்டாமல் இந்நாட்டை விட்டு ஓடிப்போக வேண்டுமென்று உத்தரவுபண்ணினான்.

அந்தக் கொடுமையான கட்டளையைக் கேட்டுத் தையற்காரன், இனி இப்பட்டணத்திலிருக்க நமக்கு ஆசையில்லை; எவர்க்கும் அசாத்தியமான காரியத்தைச் செய்யக் கட்டளையிட்டால் நாம் என்னசெய்கிறது! இப்பொழுதே இவ்விடம்விட்டு ஓடிப்போக வேண்டுவதுதானென்று நிச்சயித்து, தன் சாமான்களையெல்லாம் கட்டியெடுத்துக்கொண்டு, தனக்கு விசேஷமாகப் பொருள் கிடைத்துக்கொண்டிருந்த அப்பட்டணத்தை விட்டுப்போக மனமில்லாமல் விசனப்பட்டுக்கொண்டே புறப்பட்டுப்போனான்.

பட்டணத்துக்கு அப்பால் சிறிதுதூரம்போய் அங்கே, முன் தான் வாத்துக்குஞ்சுகளைப் பிடிக்கப்போன குளத்தின் கரையில் ஒரு மரத்தடியிலே முகம்வாடித் தலையிறங்கி உட்கார்ந்தான். அங்கே தன் குஞ்சுகளோடுகூடக் கரையிலே விளையாடிக்கொண்டிருந்த வாத்து அவன் இன்னானென்று அடையாளம் கண்டுபிடித்து அவனண்டை வந்து, நீ ஏன் இப்போது விசனமுற்றிருக்கிறாய் என்று கேட்டது. அதற்கு அவன் நடந்த வரலாற்றைச்சொல்லி, இதற்காகத் தேசாந்தரத்துக்கு ஓடிப்போம்படி நேரிட்டதேயென்று விசனப்படுகிறேன் என்றான். அதைக்கேட்டு வாத்து, இவ்வளவுதானா? இந்த அற்பகாரியத்துக்காகவா நீ விசனப்படுகிறது! வேண்டாம், உனக்குக் கைகொடுக்க நான் இருக்கிறேன். ராஜாவினுடைய கிரீடம் இந்தத் தடாகத்திலேதான் வீழ்ந்துகிடக்கிறது. நான் இதோ எடுத்துத் தருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சரேலென்று போய்த் தன் பன்னிரண்டு குஞ்சுகளோடுங்கூடத் தடாகத்தில் மூழ்கிற்று. தையற்காரன் கரைமேல் நின்று அந்த விசித்திரத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தான். மூழ்கின நாலைந்து நிமிஷத்துக்குள் பெரிய வாத்தின் பரந்த சட்டையின்மேல் கிரீடத்தை எடுத்து வைத்து மற்றக் குஞ்சுவாத்துக்களெல்லாம் அதை மூக்கினால் பிடித்துக்கொண்டவண்ணமாய், அவைகளெல்லாம் மேலே தோன்றி மெல்லமெல்லக் கரையோரத்துக்கு வந்தன. உடனே தையற்காரன் அதை வாங்கித் தன் மேலாடையில் வைத்துக்கொண்டு அதன் அழகைக்கண்டு வியந்துநிற்க, அதைச் சுகமாய் எடுத்துக்கொண்டு போம்படி அவனுக்கு உத்தரவுகொடுத்துவிட்டு வாத்துக்கள் போய்விட்டன. அற்புதமான அந்தப் பழைய கிரீடத்தை அவன் கொண்டுபோய்க் கொடுத்தபோது அரசனுக்கு உண்டான ஆநந்தத்தை என்னவென்று சொல்லலாம்! அந்த எளிய தையற்காரனைக் கட்டி முத்தமிட்டுக் கொண்டு அவனுக்குப் பலவிதமான மரியாதைகள் செய்து, கடைசியில் தான் அணிந்துகொண்டிருந்த ஒரு சிறந்த முத்தாரத்தையும் அவனுக்கு வெகுமதியாகக் கொடுத்தான்.

இந்தச் சமாசாரத்தைக் கேள்விப்பட்டுத் தச்சன், தான் செய்த சூது, சிறிதும் பயன்படாமற்போனதுமன்றி, தையற்காரனுக்கு அத்தனை உயர்வு உண்டாவதற்கு ஏதுவானதைக் கண்டு மிகவும் விசாரமுற்று, மற்றொரு துராலோசனை செய்துகொண்டு, சிலநாள் கழித்து அரசனிடத்துக்குப் போய், மகாப்பிரபுவே! ஒரு விண்ணப்பஞ்செய்கிறேன்; அது தங்கள் சித்தத்துக்கு எப்படியிருக்குமோ? இந்தத் தையற்காரன் முன்னிலும் அதிக அகங்காரியாய் இருக்கிறான்; மகாராஜாவினுடைய மாளிகையின் வடிவத்தை உள்ளும்புறமும் சிறிதளவுகூட வேற்றுமையில்லாமல், உள்ளே அமைத்திருக்கின்ற சகலமான பொருள்களோடுகூட, மெழுக்கில் அமைக்கமாட்டுவேன் என்று பெருமைபேசிக்கொள்கிறான். அதைக் கேட்க எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது என்றான். அரசன் அது உண்மைதானென்று நம்பி, உடனே தையற்காரனை வரவழைத்து, நீ நமது கோட்டையின் வடிவழகை அதிலுள்ள சகலமான பொருள்களோடும் சரியாக மெழுக்கில் அமைக்க வல்லவனென்பதாய்ப் பெருமைபாராட்டினதாகக் கேள்விப்படுகிறேன். அப்படியே அதிக சீக்கிரத்தில் நமக்கு ஒரு சித்திரவுருவம் நிருமித்துத் தரவேண்டும். அதில் எங்கேயாவது ஒரு மூலையில் சிற்றாணியொன்று தவறிப்போனாலும், உன்னைப் பாதாளத்தில் ஒரு அறையிலே ஆயுளளவும் சிறையாய் அடைத்துப்போடுவேன் என்று கட்டளையிட்டான். இக்காரியத்தை நிறைவேற்ற யாராலாவது முடியுமா? அதைக் கேட்டுத் தையற்காரன், இதென்ன துர்ப்பாக்கியம்! வருவதெல்லாம் நமக்கு விபரீதமாயிருக்கிறதே; இனி நாம் இத்தேசத்தைவிட்டு ஓடிப்போவதே சரியென்று நிச்சயித்து, தன் மூட்டையைத் தோளிலே மாட்டிக்கொண்டு ஓடிப்போகப் புறப்பட்டான்.

சிறிதுதூரம் போய், இளைப்பினால் முன் தான் கண்ட பொந்து மரத்தடியிலே உட்காந்து விசாரப்பட்டுக்கொண்டிருந்தான். அப்போது வெளியேபோயிருந்த தேனீக்களெல்லாம் திரும்பித் தம் கூட்டுக்கு வந்தன. அவைகளுக்கெல்லாம் அரசனான ஈ இவனைப் பார்த்து, நீ ஏன் இப்படித் தலையிறங்கிக்கொண்டிருக்கிறாய்; தலையில் ஏதாவது தொந்தரவா என்று கேட்க, அவன் எனக்குத் தலைநோயில்லை; அதைவிடக் கொடிதான மற்றொரு நோய் என்னை மிகவும் வருத்துகின்றது என்று, அதன்மேல் நடந்த வரலாறுகளையெல்லாம் இப்படியென்று தெளியச்சொன்னான். அதைக்கேட்டு அந்தத் தேனீ, ஆனால் நீ இதற்காக இனி விசாரப்படவேண்டாம்; வீட்டுக்குப் போய்ச் சுகமாயிரு; நாளை இந்நேரத்துக்கு ஒரு பெரிய பையை எடுத்துக்கொண்டுவா; அப்போது நீ வேண்டுவது இங்கே சித்தமாயிருக்கும் என்று சொல்லிற்று. அதைக் கேட்டுக்கொண்டு தையற்காரன் கொஞ்சம் துக்கந்தெளிந்து வீட்டுக்குப் போய்விட்டான். பின்பு அந்தத் தலைமையான தேனீ, மற்ற ஈக்களுக்கெல்

லாம், உடனே ராஜாவினுடைய மாளிகைக்குப் போய் அங்குள்ள ஒவ்வொரு பொருளையும் கருத்தாய் உற்றுப்பார்த்து, அதன்படியே சிறிதுகூட வேற்றுமையில்லாமல் மெழுக்கினல் அக்கோட்டையின் உருவமொன்று நிருமிக்கவேண்டும் என்று கட்டளையிட்டது. அப்படியே தேனீக்கள் யாவும், ராஜாவினுடைய கோட்டைக்குள் நுழைந்து, அங்கே ஒரு சிறிய ரந்திரங்கூட விடாமல் நுட்பமாய் உற்றுப்பார்த்துக்கொண்டு, திரும்பித் தம்மிடத்திற்கு வந்து, அதேமாதிரியாய் அதிக சீக்கிரத்தில் மெழுக்கினல் பிரதிமையொன்று செய்ய ஆரம்பித்து, அன்று பொழுதுபோவதற்குள் வெகு அழகாய்ச் செய்துமுடித்தன. மறுநாள் காலையில் தையற்காரன் வந்துபார்க்க, ராஜமாளிகையினுடைய வடிவத்துக்கு அணுவளவும் பேதப்படாமல் ஒரு மெழுக்குப் பிரதிமை வெள்ளைவெளேலென்று வெகு விசித்திரமாய் முடிந்திருக்கக்கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு, அதைப் பத்திரமாய்த் தன் பையில் போட்டுக் கட்டிக்கொண்டு அரசனுடைய அரண்மனைக்குப் போனன். அந்த அற்புதமான சித்திரத்தின் அழகைப் பார்த்தபோது அரசனுக்கு உண்டான ஆச்சரியம் இவ்வளவவ்வளவன்று; சிறிதுநேரம் வியப்பினல் அவன் ஒன்றும் தோன்ருமல் அப்படியே பிரமித்துநின்று, பின்பு தையற்காரனுடைய சாமர்த்தியத்துக்காக அவனை மிகவும் பெருமைப்படுத்தி, அவனுக்குப் பரிசாகச் சிறந்த மாளிகையுமொன்று கட்டிக்கொடுத்தான்.

இந்தச் சமாசாரத்தைக் கேட்டபோது தச்சனுக்கு எப்படியிருந்தது அறிவீர்களா? எரிகிற உடம்பில் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றினதுபோல் இருந்தது. அதனல் அவன் எப்படியாவது தையற்காரனை அத்தேசத்தைவிட்டு ஓடிப்போகச் செய்யவேண்டுமென்று தீர்மானித்து, ஒருநாள் ராஜசமுகத்துக்குப் போய், பிரபுக்களே ஒரு விசேஷம் கேள்விப்பட்டீர்களா? இப்பட்டணத்துக்குள் நீர்க்குழாய் எங்கும் கிடையாதென்ற செய்தியைத் தையற்காரன் கேள்விப்பட்டு, நான் நினைத்தால் இவ்வரசனுடைய அரண்மனையை ஒரு நொடியில் ஜலதுர்க்கமாக்கிவிடுவேன் என்று தற்புகழ்ச்சி பேசுகிருன் என்ருன். அதைக்கேட்டு அரசன் மிகவும் சந்தோஷப்பட்டு, உடனே அந்தத் தையற்காரனை வரவழைத்து, என் அருமைநேசனே, நீ இந்த நகரம் முழுதும் நொடிப்பொழுதில் ஜலதுர்க்கமாக்கிவிடும்படியான வல்லமையுடையவனென்று பெருமைபேசிக்கொண்டதாகக் கேள்விப்பட்டேன்; நீ அப்படிச் செய்ய வல்லவனென்பதற்குச் சந்தேகம் இல்லை. நாளைக்காலையில் இப்பட்டணத்திலெங்கும் மதுரமாய்த் தெளிந்த நீர்க்கால்கள் ஓடிக்கொண்டிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் நாளைப் பகலிலே நீ இந்தச் சபைநடுவில் உன் தலையை இழந்துவிடவேண்டும் என்ருன்.

இச்செய்தியைக் கேட்டபோது தையற்காரனுக்கு இன்னது செய்கிறதென்று தோன்ருமல், ஒரு பெருந்திகில் உண்டாயிற்று.

தனக்கு ஆயுள்முடிகிறகாலம் வந்துவிட்டதென்று மிகவும் விசனமடைந்து, அவன் அப்பட்டணத்தை விட்டு அந்தக்ஷணமே அப்புறம் ஓடிப்போனான். கொஞ்சம்தூரம் போய்த் தன் தலைவிதியை நினைத்து ஒரு மரத்தடியில் உட்காந்து அழுதுகொண்டிருக்கையில், முன்பு அவனால் ஆதரிக்கப்பட்டு, இப்போது ஒரு சிறந்த குதிரையாயிருக்கின்ற குதிரைக்குட்டியானது அவனிடத்திற்குத் துள்ளி ஓடிவந்து, ஐயா, முன் நீர் எனக்குச் செய்த உதவிக்கு நான் பிரதியுபகாரம் செய்யும்படியான சமயம் இப்போது வாய்த்தது; நீர் விசனப்படுவதற்குக் காரணம் இன்னதென்பது எனக்குத் தெரியும், இனி நீர் விசனப்படவேண்டுவதில்லை; எவ்வளவு அசாத்தியமான காரியமானாலும் நான் செய்து முடித்துத்தருகிறேன். இப்போது நான் உம்மைப்போல நான்குபேரானாலும் ஏற்றிக் கொண்டுபோகத் தக்க வலிவுடையவனாயிருப்பதால், நீர் என்மேல் சுகமாய் ஏறிக் கொள்ளலாம் என்றது. அதைக்கேட்டுத் தையற்காரன் கொஞ்சம் விசனம் தெளிந்து அந்தக் குதிரைமேல் ஏறிக்கொண்டான். உடனே அக்குதிரை அதிக வேகமாய்ச் சவாரிசெய்துகொண்டு ராஜனுடைய கோட்டைக்குள் சென்றது. அங்குள்ள முற்றவெளியிலே அக் குதிரை வலசாரியாகவும் இடசாரியாகவும் மூன்றுதரம் அதிக வேகமாகச் சுற்றிச் சவாரிவந்து கடைசியில் கீழேவீழ்ந்தது; வீழ்ந்தவுடனே பயங்கரமான பேரோசையொன்று கேட்க, அப்போது பந்து போன்ற ஒரு பொருள் பூமியைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டு ஆகாயத்திலெழும்பி அக்கோட்டையை வளைத்துக்கொண்டது. அதேநிமிஷத்தில் மிகவும் மதுரமான தெண்ணீர் அக்கோட்டையைச் சுற்றி எங்கும் ஊறத் தலைப்பட்டு, ஒரு பெரிய அகழி போல அதைச் சூழ்ந்துகொண்டது. தெய்வத்தாலன்றி மற்றெவராலும் செய்துமுடிக்கக்கூடாத அவ்வற்புதமான செயல் அத்தையற்காரனே செய்ததென்று எண்ணி, அரசன் மிகவும் ஆச்சரியப்பட்டு, தன் சபைநடுவே அவனை வரவழைத்து, ஆநந்தபரவசனாய் அவனைக் கட்டி ஆலிங்கனஞ்செய்துகொண்டு விசேஷமாக வெகு மதிகளும் கொடுத்தான்.

ஆயினும் அவனுடைய சங்கடங்கள் அவ்வளவோடு ஒழியவில்லை. இந்தத்தடவையும் தான்செய்த சூது அவனுக்கு நன்மையாகவே முடிந்ததெனக் கேட்டபோது, தச்சன் அவனிடத்தில் பின்னும் பதின்மடங்கு அதிகமாய்ப் பொறாமைகொண்டு, இனி அவனை உயிரோடு வைப்பதே உசிதமல்லவென்று யோசித்து, மற்றொருநாள் ராஜசமுகத்திற்குச் சென்று, மகாராஜாவே, தாங்கள் கொண்டாடக் கொண்டாடத் தங்கள் தையற்காரனுக்கு அகங்காரம் அதிகப்பட்டுக்கொண்டேயிருக்கிறது: தேவலோகத்திலிருந்து தங்களுக்கு ஒரு திவ்வியகுமாரன் கொண்டுவந்து கொடுக்கவும் தனக்குத் திறமையுண்டென்று அவன் பெருமைபேசிக்கொள்கிறான். (அவ்வரசனு

க்கு மூன்று பெண்குழந்தைகளேயன்றி ஆண்குழந்தை ஒன்றுகூடக் கிடையாது.) இது தங்கள் சித்தத்துக்கே தெரியவேண்டியது என்று சொல்லித் துர்ப்போதனைசெய்தான். ஆயினும் அதுவும் அந்தச் சூதனுக்குப் பயன்படவில்லை. அவன் சொன்னதைக் கேட்டு அரசன் அந்தத் தையற்காரனுடைய திறமைகளுக்காக மிகவும் ஆச்சரியப்பட்டு அவனை உடனே வரவழைத்து, நீ அங்கங்கு பெருமை பேசிக்கொள்ளுகிறபடியே இன்றுமுதல் ஒன்பதுநாளைக்குள்ளாக தேவலோகத்திலிருந்து நமக்கு ஒரு அருமைமகனை அழைப்பித்துத் தருவாயானால், என் மூத்தமகளை உனக்குக் கலியாணஞ்செய்து கொடுப்பதுமன்றி, பாதிராஜ்யமும் உனக்குப் பரிசாகக் கொடுப்பேன் என்றான். அதைக் கேட்டுத் தையற்காரன், வெகுமதி விசேஷமாகத்தான் இருக்கிறது, வருத்தம் பொறுக்கக்கூடவில்லையே! இவ்வரசன் விரும்புவது, மூடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போல் இருக்கிறதே! அதை நான் தேடிக்கொடுப்பது எப்படியென்று, இதைப்பற்றி நெடுநேரம் வீட்டில் உட்காந்து ஆலோசிக்கலானான். எந்நேரம் ஆலோசித்தும் எந்தவழியும் தோன்றாமையால், இனி நாம் இப்பட்டணத்தில் இருப்பதில் பிரயோஜனம் இல்லையென்று தீர்மானித்து, தேசாந்தரத்துக்கு ஓடிப்போம்படி புறப்பட்டான். புறப்பட்டுச் சிறிதுதூரம் போகையில், அங்கே ஒரு புலத்திலே முன் அவனால் பிடித்துவிடப்பட்ட கருடபக்ஷியானது இவனைப்பார்த்து, நீயேன் இப்பட்டணத்தைவிட்டுப் போய்விடுகிறாய் என்று கேட்க, அவன் நடந்த வரலாறுகளையெல்லாம் சொல்லி, இப்படி அடிக்கடி துன்பங்கள் நேரிட்டுக்கொண்டிருக்கிறபடியால், அப்படிப்பட்ட இடத்திலிருந்து பிழைப்பதைவிடப் பரதேசம் போவதே உசிதமென்று ஓடிப்போகிறேன் என்றான். அதைக்கேட்டு அந்த தேவபக்ஷி, அப்படியானால் நீ அஞ்சவேண்டுவதில்லை; நான் பலபேர்க்குப் பலகுழந்தைகள் கொண்டுவந்து கொடுத்திருக்கிறேன்; ஆதலால் இந்த மகாராஜாவுக்குப்பின் பட்டத்துக்கு உரியவனாய் ஒரு புதல்வனை நிருமித்துக் கொடுப்பது எனக்கு ஒரு பெரிய காரியமன்று; இதற்காக நீ தேசம்விட்டு ஓடிப்போகவேண்டுவதில்லை; திரும்பிச் சந்தோஷமாய்ப் பட்டணம்போய்ச் சேர். ஒன்பதுநாள் கழித்து அரசன் குறித்ததினத்தில் நீ ராஜாவின் அரண்மனைக்கு வருவாயானால் நானும் அப்போது அவ்விடத்துக்கு வந்து உன் மனோரதத்தைப் பூர்த்திபண்ணுகிறேன் என்றது.

அதைக் கேட்டுக்கொண்டு தையற்காரனும் சந்தோஷமாய் வீடு போய்ச் சேர்ந்து, சுகமாயிருந்து, அரசன் குறித்ததினத்தில் அரண்மனைக்குப் போனான். அவன் போய்ச் சேர்ந்த இரண்டொரு நிமிஷத்துக்கெல்லாம் அவனுடைய ஆபத்துநேசனான பக்ஷிராஜனும் அதிக வேகமாய் ஆகாயமார்க்கமாகப் பறந்துவந்து, தன் மூக்கிலே கோடிசூரியன் உதித்தாற்போலப் பிரகாசிக்கின்ற பாலகனோடு அந்

தச் சபாமண்டபத்தில் இறங்கிற்று; இறங்கினவுடனே அது கொண்டுவந்த பாலகன் அதிக ஆவலோடு ராஜமகிஷியின் மடியைத் தாவிக்கொண்டு ஓடிற்று. அவ்வருமைக் குழந்தையைக் கண்டு ராணி அதிக சந்தோஷமடைந்து எடுத்து முத்தமிட்டுக்கொண்டு உடம்பு பூரித்தாள். அந்தச் சபையிலுள்ளோர் அனைவரும் இதென்ன ஆச்சரியமென்று பிரமித்து நின்றார்கள். பின்பு அந்த தேவபக்ஷி தேவலோகத்துச் சிறந்த ஆடையாபரணங்களடங்கிய மூட்டையொன்றை அந்த ராணியின் கையிற்கொடுத்து, அதை அவளுடைய மூத்தமகள் தவிர மற்றிரண்டு மக்களுக்கும் பாகித்துக்கொடுக்கும்படி கொடுத்தது. மூத்தமகளுக்கு அந்த உத்தமகுணமுள்ள உதார புருஷனே பரிசாகக் கிடைப்பதுபற்றி, அவளுக்காக ஒன்றும் கொடுக்கவில்லை. பின்பு அப்பறவை தன் பிராணசிநேகிதனான தையற்காரனுக்கு அநேக ஆசீர்வாதங்கள் செய்துவிட்டு உயரப் பறந்து போயிற்று. ராஜா இவற்றையெல்லாம் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு, ஆநந்தக்கடலில் ஆழ்ந்து, தான் வாக்குத்தத்தம் செய்தபடியே தையற்காரனுக்குத் தன் மகளைக் கலியாணஞ் செய்துகொடுப்பதாகச் சபைநடுவே யாவரும் அறியச்சொல்லி, அவனை அழைத்துத் தன் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டான்.

அப்போது அவன், 'தருமமே ஜயம்' என்று தெய்வத்தையே நல்ல துணையாக நம்பி, உண்மைதவறாமலிருப்பவனுக்கு ஒருபோதும் தாழ்வில்லையென்று ஒருநாள் தன் தாய் தனக்குச் சொன்ன நற்புத்தி தன் விஷயத்தில் இப்போது யதார்த்தமாகவே பலிதமாயிற்றென்று சொல்லிச் சந்தோஷமடைந்தான்.

பின்பு ஒரு நல்ல சுபமுகூர்த்தத்திலே மகா வைபவத்துடனே அவ்விருவர்க்கும் விவாகம் நடந்தேறிற்று. அவ்விவாகத்திற்கு வேண்டிய தட்டுமுட்டுகள் யாவும் அம்மணமகனுக்குப் பகையாளியான தச்சனே கூலிக்குச் செய்துகொடுக்கும்படி நேரிட்டது. கலியாணமானவுடனே நடந்த நடத்தைகளின் உண்மை இப்படிப்பட்டதென்று அரசன் கேள்விப்பட்டு, மிகக் கொடியனான அந்தத் தச்சனைத் தேசத்தைவிட்டு ஓடிப்போம்படி துரத்திவிட்டான். போகும்போது அவன் முன் தையற்காரனைத் தள்ளிவிட்டுவந்த தூக்குமரத்தின் வழியாய்ப் போகையில், அப்புறம் நடக்கச் சக்தியில்லாமல் இராத்திரி அதின்கீழேயே வீழ்ந்துகிடந்தான். அப்போது அங்கு வந்து தங்கியிருந்த தீர்க்கதரிசியான காக்கைகள் அவன் கண்களைப் பிடிங்கிக்கொண்டு போய்விட்டன; பின்பு அவன் என்னகதியானானோ யாரும் அறியார்கள். பிறப்பிலே மிகவும் எளியனான அந்தத் தையற்காரன் தன் மனநற்குணங்களால் மிகவும் மேன்மையாக நெடுநாள் உலகங்களை ஆதரித்துவந்தான்.

வஸந்தருதுவின் நல்வரவு.

இப்போது சிசிரருதுபோய் வஸந்தருது துவக்கமாகிற காலமாதலால், இச்சமயத்தில் வஸந்தருதுவின் பெருமைகளை எடுத்துச் சொல்வது மிகவும் ஏற்றதாயிருக்குமென்று கருதி அதை ஒருவாறு கூறுகிறோம்.

எல்லாச் சிறப்புகளுக்கும் இருப்பிடமான இப்பூமி பல கண்டங்களாகவும் தேசங்களாகவும் பிரிக்கப்பட்டு, அவற்றுள் நாடுகளென்றும் நகரங்களென்றும் கிராமங்களென்றும், பிரஜைகள் வசிக்கப் பல வாஸஸ்தானங்கள் அமைந்ததாய் மிகவும் மேன்மைபெற்றிருக்கின்றது. அத்தேசங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததெனப் பிரசித்திபெற்றிருக்கும் இப்பரதகண்டமானது எல்லாவிஷயங்களிலும் மற்றவைகளைப்பார்க்கிலும் மேன்மைவகித்திருக்கின்றதென்பது அனைவர்க்கும் ஐயந்திரிபறத் தெரிந்தவிஷயமே. அப்படிப்பட்ட பரதகண்டத்தின் தக்ஷிணபாகமான விந்தியமலையின் தென்புறத்திலே வடமேற்குத் தேசங்களில் உள்ளதுபோல வருஷத்து ருதுக்கள் நான்காகாமல், இரண்டுமாதத்திற்கு ஒரு ருதுவிழுக்காடு ஆறு ருதுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவை வஸந்தருது, கிரீஷ்மருது, வருஷருது, சரத்ருது, ஹேமந்தருது, சிசிரருது என்பவைகளாம். அவற்றுள் முதலான வஸந்தருது ஸகலகுணங்களிலும் முதன்மையாகி எல்லாஜனங்களுக்கும் மிகுந்த மனவெழுச்சி உண்டாக்குகின்றது. அதன் பெருமைகளை முழுதும் வர்ணிப்பது எவர்க்கும் அசாத்தியமாயினும், தெய்வகடாக்ஷத்தால் நமக்குக் கிடைத்த சொற்ப புத்தியைக்கொண்டு கூடியவரையில் ஒருவாறு வர்ணிக்கின்றோம்.

வஸந்தமென்னும் சொல்லைக் காதினால் கேட்டமாத்திரத்திலே நம்முடைய மனதுக்கு ஒருபோதும் இல்லாத அற்புதமான உல்லாசமொன்று தனக்குத்தானே உண்டாகிறதென்றால், அதன் பெருமைகளை அனுபவிக்கும்பொழுது உண்டாகும் உல்லாசத்திற்கு எல்லை இவ்வளவென்று யார்தான் கண்டு சொல்லக்கூடும்? சகல ஜனங்களுக்கும் உள்ள துன்பங்களைப் போக்கி, சவுக்கியமும் உற்சாகமும் விசேஷமாக விருத்திசெய்விக்கவேண்டுமெனக் கருதி, கொடியராஜன்மேல் படையெடுத்துவருகின்ற ஒரு மகாராஜனைப்போல வஸந்தராஜன், மெல்லிய தளிர்களோடுகூடிய பூங்கொடிகளாகிய கவசமணிந்து, வண்டுகளாகிய கடிவாளம் பூட்டிய குளிர்ந்து வாதனையோடுகூடிய மந்தமாருதமாகிய போர்க்குதிரைமேல் ஏறிக்கொண்டு வருவதுகண்டு, சிசிரனுடைய சேனையெல்லாம் பயந்தோடி அழிவதுபோல, விருக்ஷங்களில் நிறைந்துள்ள பழுத்த

இலைகள் யாவும் உதிர்ந்துபோய், அழகான மெல்லிய தளிர்கள் தளிர்க்கத் துவக்குகையில், வஸந்தராஜனுடைய ஜயசங்கம்போலக் குயில்களின் மதுரமான மெல்லிய கண்டத்தொனி கேட்கலாகின்றது. மிகக் கொடிய நடக்கையுள்ள துஷ்டராஜனால் அரையிற்கட்டிய கந்தையும் போய்த் திகம்பரர்களாய் விசாரமுற்றிருக்கின்ற குடிகள், நற்குண நற்செய்கை உள்ளவனாய் நாட்டுக்கு நல்லரசன் ஒருவன் வந்ததனால் சகல சம்பத்துக்களோடுகூடச் சிறந்த நூதனமான ஆடையாபரணங்கள் அணிந்து, மிகுந்த உற்சாகம் பொருந்திப் பிரகாசிப்பதுபோல, இலைகளெல்லாம் உதிர்ந்துபோய்க் கட்டையாக நிற்கின்ற மரங்களெல்லாம் நிரம்பவும் அரும்பரும்பாக முகிழெடுத்துப் பின்பு அப்பொழுதுதான் குஞ்சுபொரித்த கிளிப்பிள்ளைகளின் இரக்கைபோலத் தோன்றி, நாளாளவிலே கொஞ்சங்கொஞ்சமாய் அலரிமலர்போல மலர்ந்து, மிகவும் மநோகரமான செம்மை நிறமுடையதாகி, பார்ப்பவர்களுக்கெல்லாம் நேத்திரோச்சவமாயிருக்கின்றன. இப்படி எல்லோர்க்கும் ஆநந்தப்பெருக்கை உண்டாக்குகின்ற வஸந்தகாலத்தினது நல்வரவு எவர்க்குத்தான் வருந்தி வேண்டத்தக்கதன்று? அந்த வஸந்தகாலத்தில் உல்லாஸத்துடன் உலாவித்திரியாத பிராணி எங்கும் இல்லை. எவரும் தாங்கக்கூடாத மிதமிஞ்சின குளிரினால் உலகத்தை மிகவும் வருத்துகின்ற ஒரு பெருங்கடலை ஓடத்தின்மீதேறி மெல்லக் கடந்து, சீதோஷ்ணங்கள் ஸமபரிமாணமாகி, தேகத்துக்குச் சவுக்கியமும் மனதுக்கு விகாஸமும் உண்டாக்குகின்ற ஒரு திவ்யமான துவீபாந்தரத்தில் சேர்வதுபோல, பனிகுளிர்களால் உலகத்தை மிகவும் உபத்திரவிக்கின்ற சிசிருதுபோய், மிகவும் மநோகரமான தளிர்களும், நன்றாக விகசித்துப் பரிமளம் வீசுகின்ற பலவகைப் புஷ்பங்களும் நிறைந்த செடிகொடிகளடர்ந்த காடுகளாலும் தாமரைத் தடாகங்களாலும் பூமியை அலங்கரிக்கின்ற வஸந்தருதுவைச் சேர்ந்தவுடனே பிராணிகளுக்கு உண்டாகும் ஆநந்தத்தை நாம் என்னென்று சொல்லலாம்.

"இம்மாசி பங்குனிமாதங்களாகிய குளிர்காலத்தின் பனியொழிந்து, விளக்குச்சுவாலையின் நுனிப்புகையேறிக் கறுத்துப்போன முத்துசரங்கள்போலப் பனியினால் கருகிப்போன மாம்பூங்கொத்துக்களெல்லாம் உதிர்ந்துபோய், சம்பங்கிப்பூக்கள் அழகாய் எங்கும் மலர்ந்திருக்க நாம் எப்போது காணப்போகிறோம்! எந்தப்புறம்பார்த்தாலும் மனதுக்கு ரமணீயமாயும் இன்பந்தருவதாயும் இருக்கிற விநோதங்களைக் கண்டுகளிப்படைவதெப்போ! நக்ஷத்திரங்களால் ஆகாயம் அலங்கரிக்கப்பட்டிருப்பதுபோலப் பூமுகிழ்களால் உலகத்திலுள்ள பூஞ்செடிகளெல்லாம் பார்க்க விநோதமாய் அலங்கரிக்கப்படுவதெப்போ! சிவப்புவர்ணங்களை எங்கும் பரவச்செய்துகொண்டு தடாகங்களுக்கு அலங்காரமாய் நிரம்ப விகஸித்து எங்

கும் பரிமளம் வீசுகின்ற செந்தாமரைமலர்களைப் பார்க்கும்படி யான பாக்கியம் நமக்குக் கிடைப்பதெப்போ! பச்சிலைப் பந்தல்களில் பட்டுக்குச்சுகள் கட்டினதுபோலச் சுகந்தக்கொடி மண்டபங்களில் சுகந்தமலர்கள் மலர்ந்து வாஸனை வீசிக்கொண்டு கொத்துக்கொத்தாய்த் தொங்கக்காண்பதெப்போ! குயில்கள் கானம்பண்ணுவதையும், கிளிகள் கொஞ்சுவதையும், மாடப்புறுக்கள் பாடுவதையும், நாகணவாய்ப்புட்கள் பேசுவதையும், இன்னும் இவ்வண்ணமே இதரமான பல பக்ஷிகளும் பூந்தாதுகளையும் பழங்களையும் தின்று கொழுத்துப் பாடகர்கள்போல மதுரமாய்ப் பாடுவதைக் கேட்டு நாம் களிப்படைவதெப்போ! வஸந்தனென்னும் இந்திரஜாலவித்தைக்காரன் தான் முதலிற்பரப்பின கெம்புக்கற்களை உடனே பச்சையாக மாற்றினானேயென்று சங்கிக்கும்விதமாய் மரம் செடிகளில் அப்போதுதான் புதிதாய் அங்குரித்த செம்மை நிறமுள்ள பூந்தளிர்களெல்லாம் பச்சைநிறமுடையவையாக மாற, புஷ்பங்களின் மகரந்தங்களைக் குடித்து வண்டுகள் விநோதமாய்ச் சம்மென்று கூவிப்பாடவும், நீர்ப்பறவைகள் நடபாபிகளில் சிறகடித்து விளையாடவும், நாம் கண்டு களிப்படைவதெப்போ! மலைப்பிராந்தங்களிலும் ஆற்றோரங்களிலும் அழகாய் மரம் செடிகளடர்ந்துள்ள காடுகளுக்குப் போய் விநோதமாக நாம் விளையாடுவதெப்போ!” என்று இப்படிப் பலவாறு வேண்டி, சிசிருது பிரவேசித்ததுமுதல் எல்லாப் பிராணிகளும், வஸந்தருதுவின் நல்வரவை எதிர்பார்த்திருப்பார்கள்.

ஸரம்கோத்ததுபோல வரிசைவரிசையாய்க் காணப்படுகின்ற பூங்கொத்துக்கள் முத்தாஹாரமாகவும், பலவகைப் பூக்களினின்றும் தேன் கலந்து உதிர்கின்ற பூந்தாதுப் பொடிகள் கலவைப்பூச்சாகவும், மிகுந்த பரிமளத்துடன் வீசுகின்ற மந்தமாருதமே உச்சுவாஸ நிச்சுவாஸங்களாகவும், பூக்களிலுள்ள தேன்கள் பலவிடங்களிலும் விளையாடுவதாலுண்டான வியர்வைநீராகவும், தளிர்களோடுகூடிய பூமொக்குகள் ரத்தினாபரணங்களாகவும், நன்றாக மலர்ந்த பலவர்ணங்களுள்ள புஷ்பங்கள் சித்திரப்பட்டாடையாகவும், மாடப்புறுக்களுடைய கூவல் ஒருவகை விநோதப்பேச்சாகவும் கொண்டு, வஸந்த புருஷனுக்காக மேன்மையாய்ச் சிங்காரித்துக் கொண்டுவந்த பெண்மணியோவென்று சொல்லும்படியாக வனலக்ஷ்மி விளங்கிக்கொண்டிருக்கையில், ஒவ்வோரிடங்களில் வேர் தொடங்கி நுனிமரம்வரையில் வெளேலென்று நிரம்பப் பூத்திருக்கிற மரங்கள் வஸந்தராஜனுடைய சேனையிறங்கும்படி அடித்த கூடாரங்கள்போல விளங்கவும், ஒவ்வோரிடங்களில் செம்மைநிறமுள்ள இளந்தளிர்கள் செம்பட்டு மேற்கட்டுகள்போல மின்னித் தோன்றவும், நன்றாக விகசித்த மலர்களின்மேல் உட்காந்திருக்கும் வண்டுகள் அகில்புகைபோலப் பிரகாசிக்கவும், காம்பற்று வீழ்ந்து தனா

யிலே வரிசை வரிசையாய்ப் படிந்திருக்கும் பூக்கள் முத்துக்கோலங்கள்போல மேன்மைபெற்றிருக்கவும், நன்ருய்ப் பழுத்த பழங்களை வயிருரத் தின்று கொழுத்து அணியணியாய் உட்காந்திருக்கும் கிளிகள் பச்சைக்கல் தோரணம்போலப் பொலியவும், பூந்தோட்டங்களெல்லாம் வெகு விநோதமாய் அலங்கரித்த வஸந்தராஜனுடைய சிங்காரக் கொலுமண்டபங்கள்போன்றன. இப்படி அனைவர்க்கும் அளவற்ற ஆநந்தமுண்டாக்குகின்ற பலவகைப் புதுமைகளால் அலங்கரிக்கப்பட்ட வஸந்தகாலத்தில், தாமரைத் தடாகங்களிலுள்ள மதுரமான நீர்களின் குளிர்ச்சியோடு பலவிதமான பூக்களின் பரிமளங்களையும் வாரிக்கொண்டு வீசுகிற மந்தமாருதமானது, எல்லாப் பொருள்களுக்கும் மிகுதியாய் மெருகுகொடுத்து அவற்றைப் பின்னும் பதின்மடங்கு அதிகமாகப் பிரகாசிக்கச் செய்வதுபோன்றது. இவ்வகைப்பட்ட உல்லாஸகுணங்கள் அனைத்திற்கும் இருப்பிடமான வஸந்தருதுவின் நல்வரவு எவர்க்குத்தான் விரும்பத்தக்கதன்று.

பூமியிலுள்ள மரமில்லா வெளிகள்.

ஆய்ந்தோய்ந்துபார்க்கையில் நாம் வாஸமாயிருக்கிற இப்பூமியின் மேற்புறம் அனைவரும் அதிசயிக்கத்தக்கதாய்ப் பலவித வேறுபாடுடையதாய் இருக்கின்றது. முதலில் நாம் இப்பூமியில் பலவிடங்களுக்கும் யாத்திரைசெய்வோமானுல், பூமியின் சீதோஷ்ணநிலை ஓரிடத்துக்கோரிடம் வெகுவாக வித்தியாசப்பட்டிருக்கக் காண்போம். அதாவது, அதிக உஷ்ணபூமியான ஸஹாரா மணல்வெளிக்கும் மிகக் குளிர்பூமியாகிப் பனிதோய்ந்திருக்கும் வடமுனையையடுத்த தேசங்களுக்கும் மத்தியில் 200 விதமான வேறுபாடுகள் தோன்றும். மேலும் ஒரேயிடத்தில் இருப்பவனுக்கும் பருவங்களின் மாறுபாட்டினுல் சீதோஷ்ணநிலைமைகளின் வேற்றுமை முன்சொன்ன அளவில் முக்கால்வாசிக்குக் குறையாமல் தோன்றும். மிக்க உயரமான மலைச்சிகரங்களுக்கு ஏறினுலும் அங்கிருந்து இறங்கினுலும் சீதோஷ்ணநிலை வெகுசீக்கிரத்தில் மாறுபடக் காணலாம். எப்படியெனில், சிறிது மணிநேரம் ஒரு பெரிய பருவதத்தின்மேல் ஏறுகிறவர்கள் மிகவும் உஷ்ணமான இடத்திலிருந்து எப்போதும் பனிமுடியிருக்கும் இடம்போய்ச் சேருவார்கள்; இவ்வண்ணமே மலைச்சிகரத்திலிருந்து கீழே இறங்குகிறவர்கள் பனிமூடிய இடம் விட்டு வெகுசீக்கிரத்தில் மிகவும் உஷ்ணமான பூமிவந்து சேருவார்கள்.

பூமியினது மேற்புறத்துக் காட்சியின் வேறுபாடுகள் சிறிதும் ஆய்ந்துபார்க்கும் திறமையில்லாத யாத்திரைக்காரர்களுக்குக்கூடத்

தனித்தனி நன்ருய்த் தோன்றுமாதலால், அவை முக்கியமாய் இரண்டாவதாகக் கவனிக்கத்தக்கவையாம். மைதானம், கணவாய், குன்று, மலே, மணல்வெளி முதலான பலவிடங்களில் தோன்றுகிற அநேக விதமான வேறுபாடுகளெல்லாம் இப்பூமியின் விநோதக்காட்சிக்கு முதற்காரணமாகின்றன. இந்த வேறுபாடுகளெல்லாம் இப்பூமியின் எந்தப்புறத்திலும் காணப்படும்; ஆயின் அவற்றின் குணம் முற்றும் மாறுப்டுவதுச் சீதோஷ்ண பேதங்களாலேதான். இந்த பேதம் நமது உணர்ச்சிக்குத் தெளிவாய்ப் புலப்படுவதுமாத்திரமேயன்றி, விருக்ஷவர்க்கங்களின் சொரூபம் விசேஷமாக மாறுபடுவதற்கும் காரணமாகின்றது. இவ்வண்ணமே அது, ஜீவவர்க்கங்கள் பூமியின் காட்சிகளுள் ஒன்ருய் இராவிடினும், அவற்றின் சொரூப பேதத்திற்கும் ஏதுவாகின்றது.

இப்பூமியின் அடிப்புறங்களிலுள்ள கற்களின் குணங்களாலும், காலக்கிரமத்திலே இவற்றிலுண்டாகும் பலவித வித்தியாசங்களாலுமே இப்பூமியின் மேற்புறம் உருவமைக்கப்படுகின்றது. ஆயினும் கற்கள்மாத்திரம் பூமிமுழுதும் உருவத்திலும் குணத்திலும் ஒரேதன்மையனவாகவே இருக்கின்றன. ஆதலால் பூமிதத்துவ சாஸ்திரத்தில் எவ்வளவு வல்லவனுயிருந்தாலும், பூமியில் ஓரிடத்திலுள்ள கற்களைமாத்திரம் பரிசோதனைசெய்து பார்த்து அவ்விடத்தின் இயற்கை இத்தன்மையதென்று நிர்ணயிக்க எவனுலும் ஆகாது. ஆயினும் அதில் தராசத்து (Fossils) கலந்திருக்குமாளுல், அதைப்பார்த்து அவ்விடத்தின் தன்மை இப்படிப்பட்டதென வெகுவாய்க் கண்டு கொள்ளலாம்.

இப்பூமியிலுள்ள விருக்ஷவகைகளின் குணங்களையெல்லாம் நன்ருய்க் கற்றுணர்ந்த தாவரசாஸ்திரியோ, தாவரப்பொருள்கள் அமைந்த பூமியைப் பார்த்து அது இத்தன்மையானவிடமெனத் தேர்ந்தறிக்கமாட்டுவான். பூமிசாஸ்திரத்தை எவ்வளவு நுட்பமாய்க் கற்றவனுனுலும் பூமியிலுள்ள கற்களைமாத்திரம் பார்த்து அது இத்தன்மையானவிடமெனக் கண்டுகொள்வது அசாத்தியமே. ஆதலால், காட்சிக்குச் சிறப்புண்டாக்குகிறவிஷயத்தில் பூமியின் மேற்புறம் எவ்வளவு மேன்மைபெற்றதாயிருந்தாலும், தரைக்காட்சி (Landscape) என்று வழங்கும் வியவகாரத்தில் முக்கியமான பொருளாய் நிற்பவை இப்பூமிக்கு அலங்காரமாய் அதில் முளைத்தெழுந்திருக்கின்ற விருக்ஷவகைகளேயாம்.

இத்தன்மையான பூமியின் மேற்புறத்தையும் அதிலுள்ள விருக்ஷவகைகளையுமே நாம் இங்கு ஒருவாறு விசாரிக்கிருேம். ஏறக்குறைய சமப்பரப்பாயிருக்கின்ற பலவித மைதானங்களும், அம்மைதானங்களில் தோன்றும் பலவிதமான விருக்ஷஜாதிகளும் இருக்கும் இடம் இன்னதென்றும், அவற்றின் உற்பத்திக்குக் காரணம் இதுவென்றும், அப்பூமியின் தன்மை அங்குள்ள சீதோஷ்ணநிலே

இவைகளுக்கும் அவ்விடத்தில் உற்பத்தியாயிருக்கும் விருக்ஷவகைகளுக்கும் உள்ள சம்பந்தம் இன்னதென்றும் தெரிந்துகொள்வதற்காக இவற்றின் சொரூபங்களை நாம் நன்றாய்க் கற்றறிவது அவசியம்.

மிகவும் விசாலமான இப்பூமியிலே சமநிலயாயிருக்கின்ற மைதானங்களெல்லாம் வெகுவாய் விருக்ஷவகைகளடர்ந்திருக்கக் காண்பது எங்கும் சாதாரணம். இம்மைதானங்களுக்குப் பெயர் ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொருவிதமாய் இருக்கின்றது; ஆனாலும் அப்பெயரின் வேற்றுமைக்கேற்றபடி அவைகளுள் ஒன்றுக்கொன்று ஒருவிதமான பேதமும் கண்டுசொல்லக் கூடாமையாயிருக்கின்றது. இவ்வாசியாகண்டத்தின் வடபுறத்திலுள்ள வெளிகளுக்கு ஸ்டெப்ஸ் (Steppes) என்றும், தென்அமெரிக்காவின் மத்தியிலுள்ள மைதானங்களுக்கு பம்பாஸ் (Pampos) என்றும், அதே தேசத்து வடபாகத்திலுள்ள வெளிக்கு லேஞஸ் (Llanos) என்றும் இப்படிப் பலவிதமாய் வழங்குகின்றனர். ஆனால் இவற்றுள் சில பெயர்களை வேறு சில வெளிகளுக்கும் சிலர் வழங்குவதுண்டு.

இவ்வாசியாகண்டத்திலுள்ள ஸ்டெப்ஸ் என்னும் வெளி இப்பூமியிலுள்ள வெளிகளெல்லாவற்றுள்ளும் மிக விஸ்திரணமானதாயும், பலவித வேறுபாடுகள் உடையதாயும் இருப்பதால், முதலில் அதைப்பற்றி விசாரிப்போம். சாதாரணமாய் ஸ்டெப்ஸ் என்று சொல்லப்படுவன இவ்வாசியாகண்டத்தின் மத்தியிலுள்ள உன்னத பூமிக்கு வடக்கிலும் வடமேற்கிலுமுள்ள மரஞ்செடிகளில்லாத விசாலமான வெளிகள்மாத்திரமேயல்ல; அம்மத்தியபாகத்திலும் வெகுதூரம் இக்காலத்துப் பூகோளசாஸ்திரிகளால் ஸ்டெப்ஸ் என்று வழங்கப்படுகின்றது. ஆதலால் ஸ்டெப்ஸ் என்னும் பலவகைப்பட்ட வெளிகளில், ருஷியாவிலும் மத்திய ஆசியாவிலும் தாழ்வான விடங்களிலுள்ள புற்களடர்ந்த புலங்களும், மத்திய ஆசியாவின் மேட்டுத்தாக்கிலுள்ள மலைகளின் மத்தியிலிருக்கின்ற மரஞ்செடிகளில்லாத வெட்டவெளியான கணவாய்களும் அடங்கியிருப்பதாகக் கொள்ளவேண்டும். ஆகவே மரஞ்செடிகளில்லாமையே ஸ்டெப்ஸ் என்னும் வெளிகளுக்கு முதன்மையான லக்ஷணமாயிருக்கின்றது; ஆயினும் தாழ்வானவிடங்களெல்லாம் நிரம்பப் புற்களடர்ந்தவையாகி ஆடு மாடு மேய்த்தே ஜீவிக்கின்ற ஜனங்களுக்கு ஏற்ற வசதியாயிருக்கின்றன. உயர்ந்த தாக்குகளிலுள்ள கணவாய்களெல்லாம் வெகுவாய்க் குடியிருப்பதற்கேற்ற இடங்களேயல்ல; அவ்விடமெல்லாம் இங்குமங்கும் சிதறுண்டுகிடக்கும் சில பூண்டுவகைதவிர வேறு ஒரு செடியும் கிடையாது. அதிசீதமாயும் அதியுஷ்ணமாயும் இருப்பதால் அவ்விடங்களில் பிரயாணிகள்கூடச் சஞ்சரிப்பது மிகவும் அசாத்தியம். இவ்வாசியாகண்டத்தில் ஸ்டெப்ஸ் என்று சொல்லப்படும் இவ்வெளியின் பரப்பைக் கேட்க அனைவர்க்கும் மிக்க வியப்புண்டாகும். ஆசியாகண்டத்தின் மொத்

தப்பாப்பான 1,80,00,000 சதுரமைலில் கொஞ்சங்குறையப் பாதி மரஞ்செடிகளில்லாத வெட்டவெளியாயிருக்கின்றது. அந்தப் பாதியிற் பாதி மேட்டுத்தாக்கு வெளியாயிருக்கின்றது. அம்மேட் டுத்தாக்கெங்கும் வெப்பமும் குளிருமே அதிகரித்து அதுவே அதற்கு முக்கியமான லக்ஷணமாய் இருக்கின்றது.

ஆசியாகண்டத்து ருஷியாவிலுள்ள ஸ்டெப்ஸ் என்னும் வெளி நெடுங்காலமாய் எங்கும் பிரசித்தமாயிருப்பதுமன்றி கிரந்தங்களி லும் அதிகமாய் வர்ணிக்கப்பட்டிருப்பதால், மற்றத் தேசங்களி லுள்ள அத்தன்மையான சில வெளிகளுக்கும் அப்பெயரையே வழங்கலானார்கள்.

வட அமெரிக்கா தேசத்தில் மிகவும் விசாலமான மரஞ்செடிகள் ஒன்றுமில்லாத வெட்டவெளிகளும், பலவிதங்களிலும் ஆசியாகண் டத்துப் பூமியையொத்த பூமிகளும் விசேஷமாயிருந்தாலும், அத் தேசத்து ஜனங்கள் ஸ்டெப்ஸ் என்னும் பெயரை ஒருபோதும் வழங் கவில்லை. ஆசியாகண்டத்தில் மேட்டுநிலத்தாக்குகள் விசேஷமா யிருப்பதுபோல, வடஅமெரிக்காவிலும் இடையிடையே மலைத் தொடர்களால் தடுக்கப்பட்ட விஸ்தீரணமான மேட்டுத்தாக்குக ளுள்ள நாடுகள் அதிகம் உண்டு. ஆயின் இந்த மேட்டுப்பூமி ஆசி யாகண்டத்து மத்தியிலே இருக்கிறது; வடஅமெரிக்காவிலோ மேலண்டைக் கோடியில் நின்று, சாந்த மகா சமுத்திரத்தையடுத்த பக்கத்தில் திடீரென்று சாய்ந்து கடல்மட்டத்துக்குச் சரியான தரை யாகின்றது. அவ்வுயர்ந்த மலைப்பிராந்தங்களுக்குக் கீழ்த்திசையி லிருந்து போனால், அப்பூமி, போகிறவன் கண்ணுக்குத் தடை யில்லாத ஒரே சமநிலயாகவே தோன்றும்; ஆயினும் வாஸ்தவத் தில் அது அப்படிப்பட்டதன்று. நமது கண்ணுக்குத் தோன்றுமலே ஒரேயளவாய்க் கொஞ்சங்கொஞ்சமாக ராக்கிமலைத்தொடரின் அடி வாரம்வரையில் உயர்ந்துகொண்டு போகின்றது. அவ்விடத்துத் தரைமட்டத்தின் உயரம் கடல்மட்டத்துக்குமேல் சுமார் ஒருமைல். இப்படி மெதுவாய் உயரும் பூமி ஐந்நூறு மைலுக்கும் அதிக தூரம் அகன்று மெக்ஸிகோ முதல் உத்தரமகாசமுத்திரம்வரையில் அந் தக் கண்டம் முழுதும் வியாபித்திருக்கின்றது. அம்மைதானத்தில் வெகுவாய் மரஞ்செடிகள் கிடைக்கவேகிடையா. ஆயின் பள்ளத் தாக்குகளில் பலவிதமான புற்பூண்டுகள்மாத்திரம் அடர்ந்திருக்கும்; உன்னத ஸ்தானத்திற்கு ஏறஏற அந்தப் பூண்டுகள் அவ்வளவு அடர்த்தியாய்க் காணப்படாவாயினும், எங்கும் முற்றும் சூனிய மாய் இருப்பதில்லை. நதிதீரங்கள்தவிர மற்றவிடங்களில் மரமென் கிற பெயரே கிடையாது. அம்மைதானங்களில் முற்காலத்திலே எருமைக்கூட்டங்கள் விசேஷமாய்க் கிடந்தனவாயினும், இருப்புப் பாதைகள் அங்கே அதிகமாய் ஏற்படத்தொடங்கினபிறகு அவைக ளும் அநேகமாய் ஒதுங்கிப்போயினவென்கிறார்கள்.

இப்படியே ராக்கிமலைத்தொடருக்கு அப்பால், அம்மலைத்தொடருக்கும் சிரனிவேடாமலைக்கும் நடுவே ஐக்கியநாட்டின் (United states) மத்தியில் ஆயிரம் மைல் விஸ்தீரணமான சமபூமியொன்று இருக்கின்றது. அவ்வண்ணமே பலவகை விசித்திரமான காட்சியுள்ள வெளிகள் அங்கு அநேகம் உண்டு. அவற்றின் மத்தியிலிருந்து பல மலைத்தொடர்கள் எழும்பியிருக்கின்றன. அவற்றின் சிகரங்களில் மிகவும் உயர்ந்தவிடங்களிலே கோடைகாலத்திலும் சிறிது சிறிதாய் அங்கங்கே பனிக்கட்டிகள் காணப்படும். அம்மலைகளின் தாழ்ந்த பக்கங்களில் விருக்ஷவகைகளே கிடையாது; ஆயினும் உயர்வான தொடர்களில் நாம் அவற்றின் சிகரங்களுக்கு ஏறும்போது விருக்ஷவகைகள் கொஞ்சம் காணப்படும். அம்மலைகளிலும் அவற்றின் கணவாய்களிலும் நிச்சப்தமாயிருந்தாலும், வாயு மண்டலத்தின் விசித்திரங்களாலும் காலைமாலைகளில் தோன்றும் சூரியகிரணங்களின் மேன்மையாலும் அவற்றின் காட்சி காண்போர் அனைவரும் வியந்து கொண்டாடத்தக்கதாய் இருக்கின்றது.

மரஞ்செடிகளேயில்லாத ஒரே விசாலமான சமநிலமாய்க் கம்பீரமான விசித்திரக்காட்சியளிப்பதில் தென்அமெரிக்காதேசம், ஆசியா வடஅமெரிக்கா இவைகளுக்கு இரண்டாவதாயிருக்கின்றது. இத்தேசத்திலுள்ள மைதானங்களுக்குப் பல பெயர்கள் வழங்குகின்றன. பூமத்தியரேகைக்கு வடக்கிலுள்ள வெளிகளுக்கு லேனூஸ் என்றும், ப்ராஜீல் தேசத்தில் கம்பாஸ் என்றும், பெருதேசத்தில் பம்பாஸ் என்றும், இப்படிப் பலவிதமாய்ப் பெயர்கள் வழங்குகின்றன. இப்பெயர்களின் வேறுபாட்டுக்குத் தக்கபடி இந்தப் பலவித மைதானங்களுக்கு ஒன்றுக்கொன்று வேற்றுமை விசேஷமாகக் காணப்படாவிட்டாலும் யாவும் ஒரேதன்மையாயிருக்கவில்லை. உற்றுப்பார்க்குமிடத்துப் பலவித வேறுபாடு உடையவையாகவே காணப்படுகின்றன.

ஒரேதன்மையான இப்பூமியில் சிலவிடங்களிலே மரஞ்செடிகள் விசேஷமாய் அடர்ந்து நெருங்கியும், சிலவிடங்களில் மரஞ்செடி ஒன்றுமில்லாமல் புற்கள்மாத்திரமே பயிராகியும், சிலவிடங்களில் ஒன்றுமில்லாத வெட்டவெளியாகவும், இப்படிப் பலவாய் இருப்பதற்குக் காரணம் என்னவென்று சற்று விசாரிப்போம்: பூமியின் சீதோஷ்ண நிலையும், வாயுமண்டலத்திலுள்ள குளிர்ச்சியுமே விருக்ஷவகைகள் வளரும் தனக்கு மிகவும் முக்கியமானவை. பூமியின் சீதோஷ்ணநிலை இதற்குக் காரணம் என்பதை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். விருக்ஷங்கள் விசேஷமாய் உஷ்ணதேசங்களில் வளருகின்றனவேயன்றிச் சீதபூமிகளில் வளருவதில்லை. உத்தரதேசங்களுக்கு யாத்திரைபோனாலும் உன்னதமான மலைகளின் மேல் ஏறிப்பார்த்தாலும் இவ்விஷயம் தெளிவாகும். எப்படியெனில், உஷ்ணதேசங்களெங்கும் சாதாரணமாயிருக்கின்ற மரங்கள்

அவ்விடம்விட்டு வடக்கே சீததேசங்களில் போகப்போக அருமை யாகி, அருமையாய்க் காணப்படுகின்றவைகளும் உருவத்தில் குட்டையாகிக் கடைசியில் முற்றும் சூனியமாய்ப் போகின்றன. பிறகு இன்னும் சிறிதுதூரம் வரையில் ஒருவகைப் புற்பூண்டுகளே காணப்படுகின்றன. அதற்கப்பால் ஒருவகைப் பாசிதவிர வேறொன்றும் கிடையாது. பெரிய பருவதங்களில் ஏறும்போதும் இதேவித மான காட்சிதான் காணப்படும். யோசித்துப்பார்த்தால் இந்த வேற்றுமைகளெல்லாம் சீதோஷ்ணநிலையின் வித்தியாசத்தால் வந்ததெனக் கூறவேண்டுமேயன்றி, வாயுமண்டலத்திலுள்ள குளிர்ச்சியின் பேதத்தினால் வந்ததென்று சொல்லச் சிறிதும் நியாயமில்லை.

விருக்ஷவகைகளின் குணகுணங்கள்மாத்திரம் முக்கியமாய் ஆகாயத்திலுள்ள குளிர்ச்சிபேதத்தாலேயே உண்டாகின்றவை. பூமியில் சிலவிடங்களில் காடுகள் விசேஷமாய் வளர்ந்திருப்பதும் இல்லாமலிருப்பதும் மழையின் மாறுபாட்டால் உண்டாவதென்பது அனைவற்கும் உண்மையாய்த் தெரிந்தவிஷயமல்லவா? வருஷந்தோறும் செம்மையாக மழைபெய்துகொண்டிருக்கும் இடங்களெல்லாம் காடுகள் விசேஷமாய் வளர்ந்திருக்கின்றன; அப்படியல்லாதவிடங்களில் மரஞ்செடிகளேயன்றிப் புற்பூண்டுகளும் செழிப்பாய் வளருவதில்லை.

இங்கு நாம் வெளிகளென்று சொல்வது மழைபெய்யாத தாக்குகளே என்பதற்குச் சந்தேகம் இல்லை. வெளியாவது விருக்ஷவகைகள் ஒன்றுமில்லாத வெட்டவெளியென்று சொல்வோமானால், அப்படி முற்றும் பாழ்நிலமான மணல்வெளி இப்பூமியில் அதிகமாய்க் கிடையாது. ஸ்டெப்ஸ் என்று வழங்குகிற வெளிகள் அப்படிப் பட்டவையல்ல; அவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த வெட்டவெளிகள் மிகவும் சொற்பமாம். மணல் நின்றவிடத்தில் நில்லாமல் எப்போதும் அலையடிப்பதுபோலப் புரண்டோடிக்கொண்டிருப்பதால், அம்மணல்வெளிகளில் வித்துகள் வேரூன்றுவதில்லை. சிறிதும் மண்ணில்லாத கல்தரைகளிலேகூடப் பாசி படருவதுண்டு. ஆதலால் ஒருவகைப் பச்சையுமில்லாத மணல்வெளி இப்பூமியில் மிகவும் சொற்பமாம்; ஆபிரிகாகண்டத்திலுள்ள ஸஹாரா என்னும் வனாந்தரமே அப்படிப்பட்டதாம்.

மரஞ்செடிகள் வளருவதற்கு ஈரம் முதற்காரணமாதலால், வறட்சியான தேசங்களில் காடுகளே இல்லாமலிருப்பதைப்பற்றி நாம் அதிசயிக்கவேண்டியதில்லை. ஆயினும் சிலவிடங்களில் இதற்கு மாறுபாடாகவும் நடக்கக் காண்கிறோம். ஆதலால் இவற்றையெல்லாம் யோசிக்கையில், சீதோஷ்ணநிலை, ஈரம் இவற்றோடு முக்கியமாய்ப் பூஸாரம் மரஞ்செடிகள் வளருவதற்கு முதற்காரணமெனத் தெளிவாகும். பூஸாரம் நல்லதாயிருந்து மழையும் ஒருவாறு பெய்துகொண்டிருக்கும். இல்லாதவிடங்களில் மரங்களைப்பார்க்கிலும் புற்

களே விசேஷமாக வளருகின்றன. இக்காரணத்தினுலேதான் சில சமபூமிகளில் விருக்ஷவகைகளில்லாமலும் பருவதப் பிராந்தங்களி லிருக்கவும் காண்கிருேம். விசேஷமாய்ப் பள்ளத்தாக்குகளிலே மலைப்பிராந்தங்களிலிருந்து அடித்துக்கொண்டு வருகின்ற ஸாராம் சங்களெல்லாம் படிவதனுல் அவ்விடங்களே விசேஷமாய்ச் செழித் துப் பலவகை பிராணிகளும் வசிப்பதற்கு ஏற்றவிடமாகின்றன.

நல்லோரிணக்கம்.

இவ்வுலகத்தில் தொத்துவியாதிகளைப் பற்றியும், அவற்றை விசே ஷமாய்ப் பரவவொட்டாமல் விலக்கவேண்டுவது அவசியமென்ப தைப் பற்றியும் நாம் விசேஷமாகக் கேள்விப்பட்டிருக்கிருேம். சவுக்கியங்கள் தொத்துவதைப் பற்றியும், அவற்றைத் தேடுவது மிகவும் அவசியமென்பதைப் பற்றியும் மாத்திரம் நாம் கேள்விப் பட்டதேயில்லை. ஆயினும் யோசித்துப் பார்க்கையில் தொத்துகிற வலிமையில் இவ்விரண்டனுள் ஒன்று மற்றொன்றுக்குக் குறைவு பட்டதல்லவெனத் தெளிவாகின்றது. நோயாளிகள் படுத்திருக்கு மிடத்திலிருந்து விஷக்காற்று வெளிப்படுகிறதென்றும், அந்தக் கெட்ட காற்றைச் சுவாஸம் வாங்கிவிடுவது அபாயத்திற்கு இட மென்றும் சொல்வீர்களானுல், அவ்வண்ணமே தேகசவுக்கியமும் பலமுமுள்ள விடங்களிலிருந்து சவுக்கியம் வியாபிக்கின்றது; அவற் றைப் பெறுபவர்களுக்குத் தேகதார்ட்டியமும் அவசியம் விருத் தியாகுமென்று சொல்லத் தடையென்ன? ஒன்றை விலக்குவது எப்படி அவசியமோ அப்படியே மற்றொன்றை வேண்டியமைப் பதும் ஒவ்வொருகாலத்தில் தேகப்பயிற்சிக்கு இன்றியமையாததா யிருக்கும். இவ்வண்ணமே கெட்ட குணங்களும் கெட்ட நடக் கைகளும் தொத்துவதைப் பற்றி நாம் மிகவும் அதிகமாய்க் கேள் விப்பட்டிருக்கிருேமல்லவா? அதைப்போல் அவ்வளவு உறுதியா கப் பிடித்துக்கொள்வது மற்றொன்றும் இல்லை. புத்திதெரியாத சிறு பிள்ளைகளைக் கெட்ட பிள்ளைகளோடு கூடாமல் காக்கும் விஷயத்தில் நமக்கு எவ்வளவு ஜாக்கிரதை வேண்டுமோ அவ்வளவு மற்றெந்த விஷயத்திலும் வேண்டுவதில்லை. ஆயினும் அதை அப்படி விலக்கு வது மாத்திரமே போதாது; இக்கெட்ட குணங்கள் தொத்தாம லிருப்பது எவ்வளவு அவசியமோ அவ்வண்ணமே புத்திப்பயிற்சி, நீதி நல்லொழுக்கம், தேகவலிமை முதலியவைகளைத் தொத்தவிடு வதும் அவசியமாம். தோட்டக்காரன் தன் தோட்டத்திலுள்ள களை, கல்முதலியவைகளை மாத்திரமே எடுத்து அப்புறப்படுத்துவது என்ன உபயோகப்படும்? அந்நிலம் நன்ருய்ச் செழிக்கும்படி தக்க

எருப்போட்டு நிலத்தை நன்ருகப் பண்படுத்தினுலல்லது அவனுடைய அந்தப் பிரயாசை அத்தனையும் வீண்போகுமல்லவா? காடுகளில் மனிதருடைய செய்தொழிலில்லாமலே மாஞ் செடிகள் செழித்து வளர்ந்திருக்குமானுல், அவ்விடத்திலும் நமக்குத் தோன்ருத ஒரு பிரகிருதிச் செயலால் அவை ஒன்றுக்கொன்று செழுமையைத் தொடரச் செய்துகொண்டு விருத்தியாகின்றனவென நாம் உறுதியாக நம்பவேண்டும்.

விருக்ஷவகைகளிலெப்படியாவது ஆகட்டும்: மனிதஜாதியில் சகலவிதமான நன்மை, அழகு, சாமர்த்தியம் முதலியவெல்லாம் தொடருந் தன்மையுடையவையென்பதற்குச் சந்தேகமேயில்லை. வேண்டுமென்று நாம் முயன்று பயிற்றுவதனுல் மாத்திரமேயல்ல, நேராகச் சம்பந்தப்படுவதனுலேயும் தொடருகின்றன. எவனுவது ஒருவன் சிறிதுகாலம் நல்ல நடக்கையுள்ள உத்தமபுருஷர்களோடு சகவாசம் பண்ணுவானுனுல் அவனும் சிறிதளவு நன்னடக்கையுடையவனுகி மேன்மைபெறுவான். முதலில் கொஞ்சங் கொஞ்சமாய் மோந்து கற்கப் பழகாதவனுக்கு எந்தத் திறமைதான் திடீரென்று சுவாதீனமாகும்! நன்ருய்த் திருந்திய நல்லோர்களோடு நெருங்கி இணங்குகிறவன் தானும் அவர்களுடைய தன்மையை மெல்ல மெல்ல அப்பியசித்துக்கொள்வான். பூததயை பச்சாத்தாபம் உடையவர்களோடு கூடியிருப்பவனுக்கும் பிராணிகளிடத்தில் ஈவு இரக்கமுதலியவைதானே உற்பத்தியாகும்.

ஆதலால் சிறுவர்களைக் காப்பாற்றுகின்ற ஒவ்வொருவரும், அச்சிறுவர்கள் தீமைகளைவிட்டு விலகியிருக்கக் கண்காணிப்பதுமாத்திரமேயல்லாமல் நல்லோர்களோடு இணங்கியிருக்கவும் பார்த்துவரவேண்டும்; கெட்ட எண்ணங்களாகிய விஷக்காற்றில் நடமாடாமல் பார்த்துவருவது மாத்திரமேயன்றி நல்ல எண்ணங்களும், உதாரபுத்தியும், கம்பிரமான நடக்கையுமாகிய பரிசுத்தமாய் வீசும் வெளிக்காற்றிலேயே உலாவும்படியாகவும் செய்துவரவேண்டும். சிறுவர்கட்குப் பெரியோர் செய்யவேண்டிய காரியம் இரண்டு: அவற்றுள் ஒன்று நேராகப் புத்திபூர்வமாய் நிர்ப்பந்தித்துப் போதிக்கவேண்டுவது; மற்ருென்று அபுத்திபூர்வமாயே தெரியாமல் தற்செயலாகக் கற்பிக்கவேண்டுவது. முதலாவதை மனச்சாக்ஷியுள்ள எல்லோரும் செய்ய முயல்வார்கள். இரண்டாவது நல்ல காற்றைப்போலக் கண்ணுக்குப் புலப்படாமலிருப்பதால் அதை அநேகர் அலக்ஷியம் செய்கின்றனர். எப்படியெனில், தகப்பன் பிள்ளைகளுக்கு நீதி நல்லொழுக்கங்களின் கடமையையும், உண்மை பிரமாணிகம் முதலியவற்றின் பெருமையையும் அவசியம் கற்பித்துக் கொடுப்பான். இளமைப்பருவத்தில் பெற்ருேரிடத்தினின்றும் பெற்றுக்கொள்ளுகிற நற்போதனையானது ஒருபோதும் புத்தியை விட்டு விலகாதாதலால் இது மிகவும் சிறந்ததே? ஆயினும் நீதியொழுக்கங்களுள்ளவர்

களின் மத்தியில் அப்பிள்ளைகளை வசிக்கச்செய்வது இதைப்பார்க்கிலும் மிகச் சிறந்ததாம். எப்படியெனில்,

மிகக்கொடியவைவயான துர்க்குணங்களினின்றும் சிறுவர்களை விலக்கிவைத்திருந்தாலும், பாடசாலையில் நடக்கிற அற்பமோசங்களும், வீடுகளில் நடக்கின்ற அற்பமான சூதுகளும், வியாபாரங்களில் நடக்கின்ற தந்திரங்களும், தரித்திரம் தளர்ச்சி அறியாமை இவற்றால் விளையும் அற்பபுத்திகளும் விடாமல் கொஞ்சங்கொஞ்சமாய் அவர்களுக்குப் பழக்கமாகும். தம்மைப்பார்க்கப் பெரியோராயிருப்பவர்கள் செய்யும் இச்செய்கைகளைப் பார்த்த பிள்ளைகள் தமது புத்திக்குத் தோன்றாமலே இக்கெட்ட குணங்களில் பழகி ஆதியில் பெற்றோர் கற்பித்த நற்புத்தியை மறந்துவிடுவார்கள். அப்படியின்றி அச்சிறுவர்கள் நல்லோர்களுடைய மத்தியில் இணங்கி நடப்பார்களானால், அவர்களுடைய நற்குணங்களெல்லாம் தமக்குத்தாமே அப்பிள்ளைகளுக்குப் பழகி அவர்களுடைய வாழ்நாளுக்கு ஒரு முக்கியமான வழிகாட்டியாகும்.

உலகத்தில் பலகுணங்கள் பலவிதமாய் இருப்பதாலும், "களவும் கற்றுமற" என்கிறபடி, கெட்டகுணங்களில் பழகுவதும் பிள்ளைகளுக்கு அவசியமாயிருப்பதாலும் சிறுவர்கள் நல்லோர்களோடு மாத்திரம் சகவாஸம் செய்வது போதாது; கெட்டவர்களோடும் பழகவேண்டுமென்பது மெய்யே. ஆயினும் இன்றியமையாதிருப்பதைப்பற்றி நல்லோர் இணக்கத்தை முக்கியமாய்ச் சொன்னது. நன்மை தீமைகளைப் பகுத்தறியும் திறமை வாலிபர்களுக்கு மிகவும் சொற்பமாகையால் அந்தத் திறமை உண்டாகும்பொருட்டு, காட்டுகிற நற்குணங்களுக்கு எதிரிடையான தீக்குணங்களும் இவையென்று எடுத்துக்காட்டி அவற்றை விட்டு நற்குணங்களைப் பெருமைப்படுத்தும்படியாகச் செய்வது அவசியமேயாம்.

தேகத்தைச் சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பவனுக்கு அழுக்கோடிருப்பவர்களைப் பார்க்க வெறுப்பு உண்டாகுமேயொழிய, ஈவு இரக்கமில்லாதிருப்பவர்களைப்பார்க்க வெறுப்பு உண்டாகாதல்லவா; ஆதலால், உதாரபுத்தி உடையவனே அற்பமான எண்ணங்களை விலக்குவான். நல்லோரிணக்கத்தால் நற்குணங்கள் இப்படித் தொத்திக்கொள்வதாயிருக்கும்போது, அதைப் பழக்குவதைப் பார்க்கப் பெரியகாரியம் வேறென்ன இருக்கின்றது. நிர்ப்பந்தித்து நன்மைகளை நாம் உபதேசிப்பதனால் ஆகும் உதவியைப் பார்க்கிலும், நாம் அவற்றை நடத்திக் காட்டுவதனாலாகும் உதவி மிகவும் சிறந்தது. புஷ்பங்களினின்றும் வாசனை உண்டாவதுபோலவே நல்லோர்களிடத்தினின்று நன்மை தனக்குத் தானே தெரியாமல் உண்டாகின்றது. அப்படிப்பட்ட நல்லோர்களைக் காண்பதே நற்குணங்களுக்கு ஒரு தூண்டுகோல்போலாகும்.

நமது தேகத்தோடு கூடவே நாம் செய்யும் நற்குண நற்செய்கை

களும் அழிந்துபோவதாயிருந்தால், அவற்றை விருத்திபண்ண நாம் வீணே பாடுபடுவானேன் என்று அதினிடத்தில் அலக்ஷியமாயிருக்கவும் கூடும்; அப்படியன்றி அக்குணங்களெல்லாம் தமக்குள்ள சர்வசக்திகளோடு பிறரிடத்தில் தொத்தி என்றும் அழியாமல் மேன்மேலும் உலகத்தில் வியாபித்துக்கொண்டிருக்கின்றனவென்றால், அப்படிப்பட்ட நற்குணங்களை விருத்திபண்ணாமல் நாம் எப்படி பின்னடையலாம்!

சிறுவர்க்கான கதை.

ஒரு சிறுபையனும் அவன் சகோதரியும்.

முற்காலத்திலே ஒரு கனவானுக்கு ரத்தினமென்று ஒரு மகனும் குணபூஷணியென்று ஒரு மகளும் இருந்தார்கள். இம்மக்களுடைய இளமைப்பருவத்திலேயே அவர்களுடைய தாய் இறந்துபோகவே அவன் மறுவிவாகம் செய்துகொண்டான். அம்மாற்றாந் தாய் அந்த மக்களை மிகவும் பகைத்துக் கொடுமையாக நடத்திவந்தாள். அதுகண்டு ஒருநாள் ரத்தினம் குணபூஷணியைப்பார்த்து, என் செல்வச்சகோதரியே, நம்முடைய அருமைத்தாய் இறந்துபோனதுமுதல் ஒரு நாழிகைகூட நாம் சுகப்பட்டதில்லை; மாற்றாந்தாய் நம்மை எப்போதும் அடித்துத் திட்டுகிறாள்; நாம் அவள் கிட்டப்போனால் காலால் உதைத்துத் தள்ளுகிறாள்; பருக்கையும் காந்தலுமாய் ஏதாவது கொஞ்சம் மிகுந்திருந்தால் அதையே நமக்கு உணவாகக் கொடுக்கிறாள். அவள் போடுகிற சோற்றை நாய் கூடத் தின்னாது. இப்படியாவது வருந்திக்கொண்டு நாம் இங்கே இருந்தாவதென்ன? எங்கேயாவது ஓடிப்போய்ப் பிழைக்கலாம் வருகிறாயா என்று அழைத்தான். அதற்கு அச்சிறுமியும் சம்மதிக்கவே அவர்கள் இருவருமாய் வெளியே போகப் புறப்பட்டுத் தனியே வயல்களும் காடுகளுமாய் நெடுந்தூரம் நடந்துபோனார்கள். நடுவழியில் மழைபெய்தபோது, நம்முடைய பரிதாபத்தைப் பார்த்துத் தெய்வந்தான் இப்படிக் கண்ணீர்விடுகிறதோ என்று சொல்லிக் குணபூஷணி விசனமடைந்தாள். அப்படியே அவர்கள் வருந்திக் கொண்டுபோகையில் ஒரு பெருங்காட்டிலே பொழுதுபோய்விட்டது. வழி நடந்துவந்த வருத்தத்தாலும், வெயிலின் வெப்பத்தாலும், பசியினாலும் அவர்கள் மிகவும் இளைப்படைந்து அப்புறம் எங்கும் போகமாட்டாமல் அங்கிருந்த ஒரு பெரிய மரப்பொந்திலே படுத்துக்கொண்டார்கள். அவர்களுக்குப் படுத்ததுதான் தெரியும்; ஆயாசத்தினால் உடனே மெய்மறந்து தூங்கிப்போனார்கள்; காலையில் உதித்து நாலைந்து நாழிகைவரையில் அவர்களுக்கு நித்திரை தெளியவில்லை. அவர்கள் நித்திரைதெளிந்து எழுந்துபார்க்

கும்போது வெயில் சுரீலென்று உறைத்தது. எழுந்தவுடனே பையன் அதிக தாகங்கொண்டு அக்காளைப் பார்த்து, தாயே எனக்கு நாவறண்டுபோகின்றது; உடனே எங்கேயாவது ஓடிப்போய்த் தண்ணீர் தேடிக் குடித்தாலொழிய நான் ஒரு அடிகூட நடக்க மாட்டேன் என்றான். அதுகேட்டுக் குணபூஷணி, மகனே, அருகாமையில் ஒரு காட்டாறு ஓடுவதாகக் கேள்வி; போய்ப்பார்ப்போம் வாவென்றாள். அப்படியே அவன் அவள்கையைப் பிடித்துக்கொண்டு மெல்ல நடந்துபோனான்.

அந்தப் பிள்ளைகளுடைய மாற்றாந்தாய் சாதாரணமான பெண்ணல்ல; ஒரு கொடிய மாயக்காரி. இம்மக்கள் ஊரைவிட்டு ஓடிப்போனது அவளுக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால் அவர்களுக்குத் தெரியாமலே அவள் அவர்கள் பின்னே பதுங்கிக்கொண்டு போய் அக்காட்டிலுள்ள ஊற்றுக்களையெல்லாம் தன்னுடைய மாயத்தால் மறைத்துவிட்டாள்.

இப்படியிருக்க இவர்கள் போனவழியிலே சிற்றாறு ஒன்று காணப்பட்டது. அதைப் பார்த்தவுடனே ரத்தினம் அதிக ஆவலோடு அதிலுள்ள நீரைக் குடிக்க ஓடினான். அத்தருணத்தில், "என்னுடைய தண்ணீரை எவன் குடிக்கிறானோ அவன் புலியாய்ப் போவான்" என்று ஒரு சத்தம் குணபூஷணிக்குக் கேளாதிருக்குமானால், உடனே அவன் அதைக் குடித்துவிட்டு இருப்பான். அந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே அவள் தன் தம்பியின் கையைப் பிடித்துக்கொண்டு, "குழந்தாய், இந்தத் தண்ணீரைக் குடியாதே; குடித்தால் நீ புலியாய்ப் போவாய் என்று ஆகாயவாணி சொல்லுகிறது; அப்படியானால் அப்புறம் நான் என்னசெய்வேன்? வேண்டாம்" என்று வேண்டிக்கொண்டாள். தாகம் அதிகமாகி மிகவும் தவித்துக்கொண்டிருந்தாலும் அச்சிறுவன் அவளுடைய நற்போதனையைக் கேட்டு, ஆயின் இன்னும் எங்கேயாவது குளம் கண்டால் தண்ணீர் குடிக்கலாம் வா போவோம் என்றான்.

அப்படியே போகையில் வழியே மற்றொரு ஓடையில் நீர் நன்றாய்த் தெளிந்து ஓடிக்கொண்டிருந்தது. அவ்வோடையில் நீர் குடிக்கச் சிறுபையன் களிப்புடன் ஓடும்போது "என் தண்ணீரைக் குடிப்பவன் கோனாயாய்ப் போவான்" என்று ஒரு ஆகாசவாணி உண்டாயிற்று. அதைக் கேட்டுக் குணபூஷணி மிகவும் அச்சங்கொண்டு தண்ணீர்குடிக்க ஓடின தம்பியை நிறுத்தி, என் செல்வமே, நீ இவ்வோடையில் ஒருபோதும் தண்ணீர் குடியாதே; குடிப்பவர்கள் கோனாயாய்ப் போவார்களென்று அசரீரிவாக்குச் சொல்லுகின்றது; நீ குடிப்பாயானால் உடனே கோனாயாக மாறி என்னைக் கொன்றுவிடுவாய்" என்றாள். ரத்தினம் இந்தத்தடவையும் அக்காள் பேச்சை அலக்ஷியம்பண்ணாமல் அங்கீகரித்து, "ஆனால் வா வேறொரு நீர்த்தடாகத்திற்குப் போவோம்; அங்கே நீ என்ன

தடை சொன்னாலும் நான் கேளேன்; எனக்குத் தாகம் மிகவும் அதிகமாயிருக்கிறது; தப்பாமல் தண்ணீர்குடித்துத் தணித்துக் கொள்வேன்'' என்றான். அப்படியே அவர்கள் அவ்விடம்விட்டு அப்புறம் போனார்கள். சிறிதுதூரத்துக்கப்பால் பெரிய தடாக மொன்று இருந்தது. அதனண்டை போகையில், ''என் தண்ணீ ரைக் குடிப்பவன் மானாக மாறிப்போவான்'' என்று ஒரு வார்த்தை கேட்டது. அது தன் காதில் விழுந்தவுடனே அச்சிறுமி தன் தம் பியைப் பார்த்து, குழந்தாய், நீ இக்குளத்து நீரைக் குடிப்பாயா னால் மானாக மாறி ஓடிப்போவாய்; நான் உன்னைப் பறிகொடுத்துப் புலம்பும்படியாகுமென்று சொல்லி அழுதாள். ஆயினும் அவள் பேச்சைக் கேளாமலே அவன் கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட் டான்; நீர்த்துளியொன்று அவன் நெஞ்சிலிறங்கினவுடனே அவ னுக்கு மான்வடிவம் வந்துவிட்டது.

ஐயோ! அந்த நடுக்காட்டில் தனியே அந்தச் சிறுபெண் என்ன செய்வாள்? தன் அருமைத் தம்பிக்கு நேர்ந்த விபத்தைப்பார்த்து, ''பட்டகாலே படும், கெட்டகுடியே கெடும்'' என்கிறபடி, திக் கற்றவர்களான நமக்குச் சங்கடத்தின்மேல் சங்கடமாய் வருகிற தேயென்று கதறிப் புலம்பினாள். மானாகமாறின தம்பியும் அவள் படுகிற துக்கத்தைப் பார்த்து அவள் காலண்டை வீழ்ந்து கண் ணீர்விட்டுக் கதறினான். அதன் பரிதாபத்தைப் பார்த்துக் குணபூ ஷணி, என் அருமை மான்குட்டியே, நான் உன்னை ஒருபோதும் விடுவதில்லை; என்னோடுகூடவே வைத்துக்கொண்டு காப்பாற்று கிறேன்; நீயும் என்னைவிட்டுப் போகாதேயென்று சொல்லி, தான் அரையில் கட்டிக்கொண்டிருந்த பொன்சங்கிலியை அவிழ்த்து அந்த மான் கழுத்தில் கட்டி, அருகாமையிலிருந்த ஒரு கயிற்றை அதிலே கட்டிப்பிடித்து அதை நடத்திக்கொண்டு போனாள். போ கப் போகக் காடு மிகவும் பயங்கரமாயிருந்தது. அப்படியே நெடுந் தூரம் போகையில் அங்கே சிறிய குடிசையொன்றிருந்தது. அத னுள் ஒருவருமில்லாமலிருப்பதுகண்டு குணபூஷணி இங்கேயே நாம் சிலகாலம் வசித்துக்கொண்டிருக்கலாமென்று எண்ணித் தன் அருமை மானை அங்கோரிடத்தில் கட்டிவிட்டு மெல்லிய தழை கள் கொண்டுவந்து அவற்றால் அதற்குப் பஞ்சணைபோல மெத் தெனப் படுக்கையொன்று அமைத்தாள். பின்பு அவள் நாள்தோ றும் காலையில் தனக்காகக் காய் கிழங்கு வகைகளும், மானுக்காக இளம்புற்களும் தேடிக்கொண்டு வருவாள். அந்தப் புற்களை மான் கன்று அதிக ஆவலோடு கறித்து மென்று தின்று அவளண்டையே விளையாடிக்கொண்டிருக்கும். பொழுதுபோனவுடனே அந்தப் பெண் தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு மானின் முது கின்மேல் தலைவைத்துக்கொண்டு படுத்துத் தூங்குவாள். தன் சகோதரன்மாத்திரம் மானாக மாறாமல் இயற்கைவடிவத்தோடி

ருப்பாளுனல் ஒரு குறையுமில்லாமல் அவள் அவ்விடத்தில் சவுக்கியமாகவே வாழ்ந்துகொண்டிருப்பாள். அந்த விசனமொன்றே அவள் மனதை எப்போதும் வருத்திக்கொண்டிருந்தது.

இப்படி அவர்கள் சிலகாலம் அக்காட்டிலேயே வாசஞ் செய்துகொண்டிருந்தார்கள். இப்படியிருக்க ஒருநாள் அத்தேசத்தரசன் அக்காட்டில் வந்து விநோதமாக வேட்டையாடத் துவக்கினுன். அப்போது எந்தப்புறத்திலும் வேட்டைநாய்களுடைய கூச்சல்களும் வேட்டைக்காரர்களுடைய இரைச்சல்களும், வேட்டைக் குழாய்களின் தொனிகளும் கேட்கலாயின. அந்தக் கூச்சல்களைக் கேட்டு மாயத்தினுல் உருமாற்றப்பட்ட இந்த மானும் குணபூஷணியைப் பார்த்து, அம்மா! வேட்டைக்காரர்களுடைய கூச்சல் எவ்வளவு விநோதமாய்க் கேட்கிறது பார்! நான் அங்கே போய் அதன் வேடிக்கையைச் சற்றுப் பார்த்துவிட்டு உடனே ஓடி வந்துவிடுகிறேன் என்று சொல்லி, தனக்கு உத்தரவுகொடுக்கும்படி வணங்கி வேண்டிக்கொண்டது. அதன் வேண்டுகோளைத் தடுக்கமாட்டாமல் அவள், குழந்தாய், நீ போய் வேடிக்கை பார்த்துவிட்டுச் சீக்கிரமே வந்துசேர். நான் காட்டுமிருகங்களுக்குப் பயந்து நமது வீட்டுக்கதவை எப்போதும் மூடிக்கொண்டிருப்பேனுகையால், நீ இங்கே வரும்போது கதவிடித்து, அம்மா கதவைத் திற என்று கூவவேண்டும்; கூவாமல் வாயை மூடிக்கொண்டிருந்தால் யாரோவென்று பயந்து நான் கதவைத் திறக்கமாட்டேன் என்ருள். அதுகேட்டு மான்கன்று அப்படியே ஆகட்டுமென்று சந்தோஷமாய்த் துள்ளி விளையாடிக்கொண்டு வெளியே ஓடிப்போயிற்று. அது வருவதைப்பார்த்து, அது வெகு விசித்திரமாயிருக்கவே ராஜாவும் அவனுடைய வேட்டைக்காரர்களும் அதைப் பிடிக்கவேண்டுமென்று துரத்திக்கொண்டு ஓடினுர்கள்; ஆயினும் அதைப் பிடிக்க அவர்களால் ஆகவில்லை. ஒரு சமயத்தில் அவர்கள் கையில் அகப்பட்டுக்கொள்வதுபோல அதிக சமீபத்திலிருக்கும்; மறுநிமிஷத்தில் ஒரேதாவாய்த் தாவி வெகுதூரம் ஓடிக் கண்காணுமற்போய்விடும். இப்படியே ஓடிக்கொண்டுபோய் அது பொழுதுபோகிற தருணத்தில் தன் குடிசையண்டைபோய்ச் சேர்ந்தது. சேர்ந்தவுடனே, அம்மா கதவைத் திற என்று கூவ, அந்தப் பெண்வந்து கதவைத் திறந்தாள். மான் உள்ளே போய் வேண்டிய புல்லைத் தின்றுவிட்டுச் சுகமாய்ப் படுத்து இரவெல்லாம் நிம்மதியாக நித்திரைபண்ணிற்று.

மறுநாள் காலையில் முன்போலவே மறுபடியும் வேட்டை துவக்கமாயிற்று. அந்த வேட்டை இரைச்சல் காதில் கேட்டவுடனே மான் முன்போலவே அங்கே போக அதிக ஆவல்கொண்டு தன்னை வெளியே அனுப்பும்படி அக்காளை வேண்டிக்கொண்டது. அவளும் அதற்கு ஒப்புக்கொண்டு, சாயங்காலம் பத்திரமாய் வந்துசேர்ந்து

என்னைக் கூவிக் கதவை இடி; நான் கதவைத் திறக்கிறேன் என்று சொல்லி மான்குட்டியை வெளியே அனுப்பினாள். கழுத்தில் ஒரு பொன்சங்கிலியோடுகூட அழகாய் ஓடிவருகிற அந்த மானைப் பார்த்தவுடனே வேட்டைக்காரர்கள் அதைத் துரத்தினார்கள். ஆயினும் அது வெகு லாகவமுடையதாய் அன்றையதினமும் அவர்கள் கையில் அகப்படாமலே ஏமாற்றிக்கொண்டு வெகுதூரம் ஓடிற்று. அதுகண்டு வேட்டைக்காரர்கள் அதனிடத்தில் அதிக கோபங்கொண்டு மாலைவேளையில் அதைச் சுற்றி வளைத்து மூடிக் கொண்டார்கள். ஒருவன் அதன் காலில் சிறிது காயம்கூடப் பண்ணினான்; அப்போதும் அது அவர்கள் கையில் அகப்படாமல் தன் வீட்டுக்கு ஓடிப்போயிற்று. ஆயினும் காலில் காயம் பட்டதுபற்றி முன்போல் அவ்வளவு வேகமாய் ஓடக்கூடாமல் மெல்ல ஓடினதனால், வேட்டைக்காரர்களுள் ஒருவன் அதைத் துரத்திக்கொண்டு அதன் பின்னேயே வீடுமட்டும் ஓடினான். அந்த மான் வீட்டுக்கதவை இடித்து, அம்மா கதவைத் திற என்று கூவின சத்தங்கூட அவனுக்குக் கேட்டது. உடனே கதவு திறக்கப்பட்டதையும், மான் உள்ளே புகுந்தபின்பு மூடப்பட்டதையும் அவன் பார்த்துத் திரும்பிப்போய்த் தான் கண்டதும் கேட்டதுமாகிய எல்லாவற்றையும் அவன் அரசனுக்குச் சொல்லி, நாளையதினமும் நான் அந்த மானைத் துரத்திக்கொண்டுபோய் அதன் செய்திகளைச் செம்மையாய்த் தெரிந்துகொண்டுவருகிறேன் என்றான்.

தன் அருமைத் தம்பியான மான் காலிலே காயம்பட்டுக்கொண்டு வந்ததைப்பார்த்துக் குணபூஷணி மிகவும் விசனமடைந்து, ஐயோ! எங்கேயோ நடுக்காட்டில் ஒருவர்கண்ணிலும் படாமல் அடைத்துக்கொண்டிருக்கிற நமக்கு இந்தத் துன்பமும் வரவேண்டுமா என்று சொல்லி விசாரப்பட்டு, அதன் காலில் பெருகிக்கிடந்த ரத்தத்தையெல்லாம் நன்றாய்க் கழுவித் துடைத்து ஏதோ ஒரு பச்சிலை கொண்டுவந்து அரைத்து அதன்மேல் பூசிவிட்டு, அதைப் பத்திரமாய்த் தூங்கப்பண்ணினாள். அந்த காயம் மிகவும் சொற்பமாயிருந்தபடியால், பொழுதுவிடிவதற்குள் அது ஆறிப்போயிற்று. மறுநாள் காலையில் முன்போலவே வேட்டைக்காரர்களுடைய கூச்சலைக்கேட்டு அந்த மான்குட்டி அதிக உற்சாகமடைந்து தான் அன்றையதினமும் வேட்டைக்குப் போய் வரவேண்டுமென்று சகோதரியை வேண்டிக்கொண்டது. அதற்கு அவள், குழந்தாய், நீ வீட்டைவிட்டு எங்கேயும் வெளியே போகாதே. இனி உன்னைக் கண்டால் அவர்கள் உடனே கொன்றுபோடுவார்கள் என்று பலவிதமாய்ச் சொல்லித் தடுக்க, என்னசொல்லியும் அது கேளாமல், இனி நான் ஒருவர் கையிலும் அகப்படமாட்டேன்; நீ வேட்டைக்கு என்னை விடமாட்டேனென்றால் நான் இப்போது இவ்விடத்திலேயே பிராணனை விட்டுவிடுவேன் என்று

மூர்க்கமாய்ப் பிடிவாதம்பண்ணினதுகண்டு அவள் வேறுவழியில்லாமல் அதை வெளியே அனுப்பினுள்.

மான் அதிக சந்தோஷங்கொண்டு ஒரேகுதியாய்க் குதித்து ராஜா வேட்டையாடும் இடம்போய்ச் சேர்ந்தது. இம்மானைப் பார்த்தவுடனே அரசன், பொழுதுபோகிறவரையில் இதை நீங்கள் துரத்திக்கொண்டு போங்கள்; துரத்தும்போது இதற்கு ஏதாவது தீங்குசெய்யப்போகிறீர்கள்; பத்திரமென்று தன் வேட்டைக்காரர்களுக்குத் திட்டஞ்செய்தான். அப்படியே அவர்கள் அதைத் துரத்திக்கொண்டு போனுர்கள். மாலைப்பொழுதானபிறகு அந்த மான் நுழைந்த குடிசையைத் தனக்குக் காட்டும்படி அரசன் வேட்டைக்காரர்களைக் கேட்க, அப்படியே அவர்கள் அரசனை மான்குடிசையண்டை அழைத்துக்கொண்டு போனுர்கள். அரசன் அந்த வீட்டுக்கதவை இடித்து மான்கூவுவதுபோல, அம்மா கதவைத்திற என்று கூவ, தன் தம்பிதான் வந்திருக்கிறதென்று குணபூஷணி கதவைத் திறந்தாள். அரசன் உள்ளே நுழைந்து அவளுடைய சவுந்தரியத்தைப் பார்த்து மிகவும் பிரமித்து நின்றுன். அந்தப் பெண்மணியோ தன் தம்பி வாராமல் சிரசில் ரத்தினக்கிரீடமணிந்த யாரோ ஒரு புதுமனிதன் வந்து நிற்பதைப்பார்த்துப் பயந்துநின்றுள். அவள் தன்னைப் பார்த்து பயந்தாளெனக் கண்டு அரசன் புன்னகைகொண்டு, பெண்ணே பயப்படாதே; நான் இத்தேசத்தரசன்; நீ யார்? இக்காட்டில் ஏன் வந்து அல்லாடுகிறுய்? உனக்கு இன்னும் கலியாணமில்லையெனக் காண்கிறது; என்னுேடுகூடப் பட்டணத்துக்கு வந்து என்னைக் கலியாணஞ்செய்துகொள்ள உனக்கு இஷ்டமாவென்று கேட்க, அம்மகள், தங்கள் சித்தம் என் பாக்கியமையா! அப்படியே செய்யுங்கள். ஆனுல் என் அருமை மானும் கூடவே வரவேண்டும்; அதைவிட்டு நான் நிமிஷங்கூடப் பிழைத்திரேன் என்றுள். அதைக்கேட்டு அரசன், உன் இஷ்டத்துக்கு இரண்டாவதில்லை; என்னுடைய செல்வங்களையெல்லாம் நீ உன் இஷ்டப்படியே ஆளலாம் என்றுன். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் மானும் காட்டிலிருந்து திரும்பிவந்தது. வந்தவுடனே அப்பெண் அதன் கழுத்தில் ஒரு கயிற்றைக்கட்டிப் பிடித்துக்கொள்ள, அரசன் அம்மகளைத் தன் குதிரைமேல் ஏற்றிக்கொண்டு பட்டணத்துக்குப் போய்விட்டான்.

பின்பு ஒரு நல்ல சுபமுகூர்த்தத்திலே அவ்விருவர்க்கும் வெகு மேன்மையாக விவாகம் நடந்தேறிற்று. வெகுகாலம் அவர்களெல்லாரும் ஒரு குறையுமின்றிச் சுகமாகவே வாழ்ந்துகொண்டிருந்தார்கள். மான் குட்டியும் அப்பட்டணத்து உத்யானவனங்களில் விநோதமாக மேய்ந்து விளையாடிக்கொண்டு களிப்புற்றிருந்தது.

இச்சிறு பிள்ளைகளை இவ்வளவுதூரம் வருத்திய மாற்றுந்தாய், நடுக்காட்டிலே குணபூஷணியை ஏதாவது ஒரு காட்டுமிருகம்

கிழித்துக் கொன்றுபோட்டிருக்குமென்றும், மாணுய்ப்போன அவன் தம்பியை யாராவது வேட்டையாடிக் கொன்றுபோட்டிருப் பார்களென்றும் எண்ணி அகங்களித்திருந்தாள். இப்படியிருக்க அவர்கள் பட்டணம்போய்ச் சேர்ந்து ராஜாவினிடத்தில் வெகு சவுக்கியமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறுர்களெனக் கேள்விப்பட்ட போது அவளுக்கு உண்டான ஆக்கிரகமும் பொருமையும் இவ் வளவு அவ்வளவல்ல. அதுமுதல் அவளுக்கு இராப்பகல் நித்தி ரையேயில்லை; இனி எந்தவிதமாய் அவர்களுக்குத் தீங்குசெய்கிற தென்று எப்போதும் அதேசிந்தையாயிருந்தாள். அந்த மாயக்கிழ விக்கு ஒரு பெண்ணுண்டு. அந்தப் பெண்ணைப்போல் அவலக்ஷண மான பெண் உலகத்தில் வேறில்லை; இவ்வளவோடு அதற்கு ஒரு கண் பொட்டை. இப்படிப் பார்க்கவழங்காமல் மிகக் குரூபியாய் எல்லோராலும் இகழப்பட்டிருந்தாலும், ராஜாத்தியாகும்படியான பாக்கியம் தனக்கு இன்னும் கிடைக்கவில்லையேயென்று சொல்லித் தாயோடு அச்சிறுக்கி எப்போதும் விசாரப்பட்டுக்கொண்டே இருந்தாள். அதைக்கேட்டு அந்தக் கொடிய கிழவியும், நீ விசாரப் படாதே; நான் எப்படியாவது சமயம்பார்த்து உன் மனோரதத் தைப் பூர்த்திபண்ணுகிறேனென்று சொல்லிக்கொண்டேயிருந்தாள்.

இது இப்படியிருக்க, ஒருகால் அரசன் வேட்டைக்காக வெளியே போயிருந்த சமயத்தில் அவனுடைய ராணியான குணபூஷணிக்கு ஒரு குழந்தை பிறந்தது. அத்தருணங்கண்டு மாயக்காரக் கிழவி மருத்துவச்சி வடிவம்பூண்டு ராஜாத்தி பிள்ளைபெற்றிருக்கும் இடத் திற்குப் போனுள். போய்த் தான் அவளுக்கு மிக்க இதமானவள் போலப் பாவனைபண்ணி, பிரசவித்த வருத்தத்தால் தேகஸ்மாணை யில்லாமல் இட்டகால் இட்டகைகளாய் வீழ்ந்துகிடக்கிற ராணி யைப் பார்த்து, என் கண்மணியே எழுந்திரு; குளிக்க வெந்நீர் சித் தமாயிருக்கிறது; உடம்பை உருவிக் குளித்தால் உன் களை தெளிந்து போம்; வெந்நீர் ஆறிப்போகிறது; சீக்கிரம் எழுந்துவாவென்று சொல்லித் தானும் தன் மகளுமாய் அவளைத் தூக்கிக்கொண்டுபோய் வெந்நீர்வைத்திருந்த மற்றொரு அறைக்குக் கொண்டுபோய்விட்டு, அந்த அறைநிரம்பச் சூழ்ந்துகொள்ளும்படி புகைபோட்டுவிட்டுக் கதவை மூடிக்கொண்டு வெளியே வந்துவிட்டாள். அந்தப் புகை யினுல் திக்குமுக்காடி ராஜாவின் அருமை மனையாட்டி உயிரை இழந்துபோயிருக்கவேண்டுமேயொழிய வேறுவழியில்லை.

பின்பு அந்தக் கொடிய மாயக்காரி தன் மகளுக்கு ராஜாத்தி போல வேஷம்போட்டுஅவள் படுத்துக்கொண்டிருந்த படுக்கையில் அப்பெண்ணைப் படுக்கச்செய்தாள். அவள் தன் பெண்ணுக்கு என்ன அழகு பண்ணினுலும் கொள்ளைக்கண்ணைமட்டும் நல்லக் கண்ணுக்கக்கூடவில்லை.

அன்று மாலைவேளையில் வேட்டைக்குப்போயிருந்த அரசன்

திரும்பி வீடுவந்து தனக்குக் குழந்தை பிறந்த செய்தி கேள்விப்பட்டு மிகவும் களிப்படைந்து, உடனே தன் மனையாட்டியைப் பார்க்கவேண்டுமென்று, பிள்ளைபெற்ற அறைக்குப் போனான். ஆயினும் அங்கு மருத்துவச்சிபோலிருந்த மாயக்காரி, இப்போது நீர் அவளைப் பார்க்கிற தருணமன்று; கதவைத் திறக்கக்கூடாதென்று சொல்லி தடுத்துவிட்டாள். உண்மைதானென்று அரசன் அதை நம்பி அப்புறம் போய்விட்டான். அதனால் அம்மாயக்கிழவி செய்த சூது அப்போது எவர்க்கும் தெரிய வழியில்லாமல் போய்விட்டது.

அன்று நடுராத்திரியில் எல்லோரும் அயர்ந்து தூங்குகிற தருணத்தில், குழந்தையின் தொட்டில் பக்கத்திலே தூங்காமல் விழித்துக்கொண்டு உட்காந்திருந்த தாதி, கதவைத் திறந்துகொண்டு ராஜாத்தி அவ்வறைக்குள் வரக்கண்டாள். வந்து அவள் தொட்டிலிலே விட்டிருந்த குழந்தையைக் கையிலெடுத்துப் பால் கொடுத்துச் சீராட்டித் தொட்டிலில் விட்டதுமன்றி, அதற்குச் சமீபத்திலிருந்த தன் மான்குட்டியையும் தடவிக்கொடுத்துவிட்டு வெளியே போய்விட்டாள். இவற்றையெல்லாம் இராத்திரி பார்த்துக்கொண்டிருந்த தாதி மறுநாள் காலையில் வாயில்காப்போர்களைக் கண்டு, நேற்றிராத்திரி யாராவது புதுமனிதர் உள்ளே வந்ததுண்டா என்று கேட்க, அவர்கள் நாங்கள் ஒருவரையும் பார்க்கவில்லையென்றார்கள். இப்படியே சிலநாள் நடந்துவந்தது. ஆயினும் அவள் ஒருவரோடும் ஒரு பேச்சுக்கூடப் பேசவில்லை. நாள்தோறும் அவள் வருவதைப் பார்த்துக்கொண்டிருந்த தாதியும் அச்செய்தியை ஒருவரோடும் சொல்லத் துணிவுபெறாமலே இருந்தாள்.

இப்படியிருக்க ஒருநாள் ராஜமகிஷி இராத்திரி தான் வந்தபோது, "இனி என் குழந்தையைக் காப்பாற்றுவது யார்? என் மானைப் போஷிப்பது யார்? இன்னும் இரண்டு இராத்திரிதான் நான் வருவேன்; அப்புறம் ஒருபோதும் வரமாட்டேன்" என்று சொல்லிப்போய்விட்டாள். தாதி இந்தப் பேச்சையும் கேட்டுக்கொண்டிருந்தாளாயினும் அதற்கு ஒன்றும் பதில்சொல்லவில்லை; ஆனாலும் காலையிலெழுந்ததும் அவள் இனி நாம் இவ்விஷயத்தை வெளிப்படுத்தாமல் ஒளித்துவைத்திருப்பது சரியல்லவென்று தெரிந்து, உடனே அரசனண்டைபோய்த் தான் கண்டதும் கேட்டதுமான எல்லாவற்றையும் அறிவித்தாள். அதைக்கேட்டு அரசன் ஆ, இதென்ன ஆச்சரியம்! இதன் கருத்து இன்னதென எனக்கு வெளிப்படவில்லையே! இன்று இராத்திரி நானே வந்திருந்து இதன் உண்மையைக் கண்டறிகிறேன் என்று சொல்லி, அப்படியே அன்றிராத்திரி அங்கே போய்ப் பார்த்திருந்தான். அர்த்தராத்திரியில் ராஜாத்தி வந்து, முதனாள் ராத்திரி கூறியதுபோலவே கூறி, இனி நான் ஒரேதரந்தான் இவ்விடத்துக்கு வருவேன்; அப்புறம் என்னை ஒருவரும் காணக்கூடாது

என்று சொல்லி வழக்கம்போலவே குழந்தைக்குப் பால்கொடுத்து விட்டு மறைந்துபோனாள்.

அப்போது அரசன் அவளோடு ஒன்றும் பேசத் துணியவில்லை. மறுநாள் இராத்திரியும் அப்படியே பார்த்துக்கொண்டிருந்தான். அன்றையதினமும் அவன் மனைவி அவ்விடத்துக்கு வந்து முன் போலவே சொல்லிக் கடைசியில் இனி நான் ஒருபோதும் இவ்வி டத்துக்கு வரமாட்டேனென்று சொல்லக்கேட்டு, அரசன், இனி நாம் தாமதித்தால் பிரமாதம் விளையுமென்று அறிந்து உடனே வெளிப்பட்டு அவள் கையைப் பிடித்துக்கொண்டு, பெண்மணியே நீ என் அருமைமனையாட்டியல்லவா? ஏன் இப்படி வந்து பேசுகி றாய் என்று கேட்க, அவள், ஆம், நான் உம்முடைய அருமைமனை யாள்தான் என்றாள். அதேநிமிஷத்தில் தெய்வகடாக்ஷத்தால் அவ ளுக்கு முன்போல மானிடவடிவம் வந்ததோடுகூட முன்னிருந்த தைப் பார்க்கப் பதின்மடங்கு அதிகமான வடிவழகு உண்டா யிற்று. பின்பு அவள் அரசனைப் பார்த்து, அந்த மாயக்கிழவியும் அவள் மகளுமாய்ச் செய்த சூதுகளையெல்லாம் ஒன்றுகூட விடா மல் சொல்லிமுடித்தாள். அரசன் அதுகேட்டு அந்தக் கிழவியி னிடத்தில் அதிக கோபங்கொண்டு, தாய் மகள் இருவரையும் நியா யஸ்தலத்துக்கு வரவழைத்து விசாரணைசெய்து அவர்களுக்குக் கொடிய தண்டனைவிதித்தான். மாயக்காரியின் மகளைக் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டுவிட்டார்கள். மாயக்காரியைப் பெருந் தீயிலே தள்ளி எரித்துவிட்டார்கள். அவள் எரிந்து சாம்பலாய்ப் போனவுடனே, ராஜமகிஷியின் சகோதரனுக்கு மான்வடிவம் மாறி மேன்மையான மனிதவுருவம் உண்டாயிற்று. அப்போது அவ னுடைய வடிவழகைக் கண்டு அனைவரும் அதிசயித்தார்கள். பின்பு அவர்களுக்கு ஒரு குறைவும் உண்டாகவில்லை. ஆயுளள வும் அனைவரும் உயர்வாகவே வாழ்ந்திருந்தார்கள்.

சமாசாரம்.

ஹைதராபாத்து நிஜாமுக்த நடக்கப்போகிற பட்டாபிஷேகம்.—நாளதுளூத்துக் கடைசியில் இளவரசராகிய நிஜாமுக்குப் பட்டாபிஷே கம் செய்விக்க நிச்சயித்து அவ்விடத்து மந்திரியாகிய ஸர் ஸாலர்ஜங், வருகிற நவம்பர்மாதத்திலே அப்பட்டாபிஷேக மகோற்சவத்தை நடத்தும்படி கவர் னர் ஜனரலவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறாராம்.

ஆலயவிசாரணை கம்மீட்டியார்.—தேவாலயம் முதலிய மதஸம்பந்த மான விஷயங்களில் செலவாகும் செலவு முதலானவற்றை விசாரிக்கும்படி கல்கத்தாவில் சீக்கிரமே ஒரு கம்மிட்டியாரை ஏற்படுத்தப்போகிறார்களாம்.

கார்பீல்டு துரை. — கார்பீல்டு துரையைக் கொன்றவனைப் பிடித்து விசாரணை செய்ததில் அவனைத் தூக்குப்போடும்படி தீர்மானமாயிற்று; ஜூலைமீ 30உ அந்தத் தீர்ப்பை நிறைவேற்றப்போகிறார்கள்.

C. K. S. Press, Vepery, Madras, 1882.